போன் நெ. 15. விலை 2 அணா REGD No. 4642

# திராவிடநாடு

ஆண்டு சந்தா ரூ. 7—0—0

மலர் 13 | 6—3—55 | இதழ் 35

## ★ இந்தச் சுதந்திரம் ★

[வெள்ளையனைவிரட்டினோம்!-என்று கித்தாப்பு பேசிய, காங்கிரஸ், இன்று அவனுடைய அரசுப் பாதையிலேயே நடைபோடுகிறது.

பிரிட்டிஷ் பள்ளியில் படித்துத் தேறிய பண்டித நேருவுக்கு, பிறநாட்டு அரசியலைவிட, பிரிட்டனின் அரசியல் வழியில் ஆசை செல்வதில் அதிசயமில்லை.

பக்குவமடையாத காலத்தில், தூக்கிக் கொடுக்கப்பட்டதாகும், இந்தியாவுக்கு வந்த சுதந்திரம்! எனவே, எந்த வழியில் தமது புது அரசைக் கொண்டு செல்வது எனும் திட்டம், இல்லாமற்போனது, வியப்பில்லை.

எனினும், சுதந்திரம் பெற்றோம்! அதற்கென ஒரு அரசியலையும் தயார் செய்துகொண்டோம்! அந்த அரசியலில், பணக்காரர்களுக்குப் பாதுகாப்பு, தனிச்சொத்துரிமை போன்ற சமூகக் கேடுகளையும் சட்டமாக்கிக் கொண்டிருக்கிறோம். காரணம், இதுவே இங்கிலாந்தின் மாடல்!

ஜனநாயக ஆட்சி, தனி மனிதனின் சுதந்திர வாழ்க்கை ஆகியவைகளைப் பற்றிப் பேசினால், பிரிட்டனை உதாரணம் காட்டிப் பேசும் வழக்கம் இன்னும் இருக்கவே செய்கிறது. அங்கே, பிற்போக்குவாதிகளுக்கும் கட்சி உண்டு! முற்போக்குவாதிகளுக்கும் கட்சி உண்டு!! இரண்டும், அதிகாரத்தில், அமர்வதுண்டு.

## தி. மு. கழகத் தேர்தல்கள்

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் தி. மு. கழகத் தேர்தல்கள் பற்றிக் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார்; அது வருமாறு:—

தி. மு. கழக சிற்றூர் (சிறிய பஞ்சாயத்து — Minor Panchayat)க் கிளை, பேரூர் (பெரிய பஞ்சாயத்து— Major Panchayat)க் கிளை, நகர (நகராட்சி—Municipality)க் கிளை, சென்னை வட்ட (Division)க் கிளை, ஆகியவற்றின் புதிய செயற்குழுத் தேர்தல்கள் நடைபெற, 27-3-55- ஞாயிற்றுக்கிழமை, தேர்தல் நாளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| மார்ச் 27— | கழகக் கிளைகள் தேர்தல். |
| ஏப்ரல் 10— | மாவட்டக் கழகத் தேர்தல் |
| ஏப்ரல் 24— | புதிய பொதுக் குழு. பொதுச் செயலாளர் தேர்தல். |

எல்லா மாவட்டங்களின் செயற்குழுத் தேர்தல் நாளாக, 10—4—55 ஞாயிற்றுக்கிழமை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

புதிய பொதுக் குழு கூடிப் பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுக்கும் நாளாக, 24-4-55 ஞாயிற்றுக்கிழமை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

1-3-55-ஆம் நாளிலிருந்து 31-4-55 ஆம் நாள்வரையில் புதிய உறுப்பினர்கள் சேர்ப்பது நிறுத்தப்பட்டிருக்கிறது. 28-2-55ம் நாள்வரை உறுப்பினரானவர்கள்மட்டுமே கிளைக் கழகத் தேர்தலில் பங்கு கொள்ளவேண்டும். 28-2-55-ஆம் நாளுக்கு முன்பு அமைக்கப்பட்ட கிளைக் கழகங்கள் மட்டுமே தேர்தல் நடத்தவேண்டும். புதிய கிளைக் கழகங்கள் அமைப்பது 1—5—55க்கு மேல்தான் நடைபெறவேண்டும்.

கிளைக் கழகங்கள் அண்மையில் தேர்தல் நடத்தியிருந்தாலும் 27-3-55ஆம் நாளில் மீண்டும் கூடி உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

தேர்தல் முடிவுகளைக் கிளைக் கழகப் பதிவுச் சீட்டில் எழுதி, 31-3-55க்குள் தலைமைக்கழகத்துக்குஅனுப்பிவைக்கவேண்டும். கிளைக் கழகப் பதிவுச் சீட்டு தலைமைக் கழகத்திலிருந்து 10-3-55 ஆம் நாள் அனுப்பிவைக்கப்படும். பதிவுச் சீட்டு கிடைக்கப்பெறாத கிளைக் கழகங்கள் உடனே தலைமைக் கழகத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

27—3—55-ல் தேர்தல் நடத்திப் பதிவுச் சீட்டைத் தலைமைக் கழகத்துக்கு அனுப்பிவைக்கும் கிளைகள் மட்டுமே மாவட்டக் கிளைச் செயற்குழுத் தேர்தலில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பெறும்.

கிளைகளின் தேர்தல் விதிகளும், முறைகளும் அடுத்த அறிக்கையில் வெளியிடப்படும்.

அண்ணாதுரை,
பொதுச்செயலாளர்.

அட்லியின் தொழிற் கட்சி, சோஷியலிச முழக்கங்கள் பேசும். அதிகாரத்தில் அமர்ந்தாலோ, அதுவும் தனது நாட்டின் 'பழைய' பந்தாவுக்கேற்றபடி காரியங்களைச் செய்யுமே ஒழிய, புதிய புரட்சிகள் எதையும் செய்யத்துணியாது! சர்ச்சிலின் 'கன்சர்வேடிவ்' கட்சியைப் பற்றித்தான் சொல்ல வேண்டியதில்லை!

இப்படிப்பட்ட பிரிட்டனைப்பற்றி, பேசினர், ஒருவர்–1935ல். அவர்தான் பேரறிஞர் பெர்னாட்ஷா. வானொலியில் ஆற்றிய பேச்சு, அது! அவர் கருத்துரைகளைக் கவனித்துப் படித்தால், 'போலிச் சுதந்திரவாதிகளின்' போக்கு விளங்கும்.

பேச்சில், 'இந்தச் சுதந்திர வாழ்வின்' போலித்தளங்களை அம்பலப்படுத்துவதோடன்றி, 'இந்தச் சுதந்திர வாதிகள்' தங்களைக் காப்பாற்றிக் கொள்ள செய்துகொள்ளும் 'ஜபர்தஸ்து'களையும், 'இந்தச் சுதந்திர வாழ்வில்' முதலாளிகளின் நிலை உழைப்பாளிகளின் நிலை ஆகியவைகளையும்கூட எடுத்துக் காட்டுகிறார்.

ஏழைகள் தலைமீது வரிகள்! பணக்காரர் தம் வருமானத்துக்கு வரிச் சலுகை! ஆனால், அதே சமயத்தில், சோஷியலிசப் பாதையில் நடைபோடுவதாக முழக்கம்!— இப்படிப்பட்ட மஞ்சள் ஏகாதிபத்தியத்துக்கு அடிமைப்பட்ட நமக்கு, பெர்னாட்ஷாவின் பேருரை, சில உண்மைகளைத் தெளிவாக்கும்: படியுங்கள்,—இனி ]

* * *

"முதலாளி வகுப்பிற்கு, அதனுடைய சட்டசபைகள் மூலமாகவும், பள்ளிக்கூடங்கள் பத்திரிகைகள் மூலமாகவும், நமது அடிமைத்தனத்திலிருந்து நாம் நீங்கிவிடாதபடி நம்மைத் தடுப்பதற்குவேண்டிய பகிரதப் பிரயத்தனங்களைச் செய்வது இயற்கையாக இருக்கிறது.

அதனால், என்னென்னவோ சொல்லுகிறார்கள். ஆகா, நமது தேசம் குழந்தைப் பிராயத்திலுள்ள சுதந்திர நாடு! மன்னாதி மன்னர்களை வீழ்த்திய நாடு! மக்களுக்கு அதிகாரங்களைப் பெற்றுத் தந்திருக்கும் நாடு!—என்கிற விஷயத்தை அடிக்கடி நினைவூட்டிக் கொண்டேயிருக்கிறார்கள்.

"இந்தச் சுதந்திரத்தால் எனக்கென்ன நன்மை? இயற்கையின் உண்ண—வாழ—உடுக்க, உள்ள தேவைகளை நீக்கவும் முடியவில்லையே. இந்தச் சுதந்திரத்தால்" என்று கேட்டால், வாக்குரிமை வந்திருக்கிறதே!' 'ஒவ்வொருவருக்கும் வோட்டுரிமை கிடைக்கவில்லையா, என்று சொல்லுகிறார்கள்.

வாக்குரிமையினாலென்ன நன்மையிருக்கிறதென்று கேட்டால் "தொழிற்சாலைச் சட்டங்கள், சம்பள நிர்ணய போர்டுகள், இலவசக் கல்வி, உபசாரச் சம்பளங்கள் முதலியன ஏற்படவில்லையா இதனிலும் அதிகமாக என்ன நியாயமாக எதிர்பார்க்கமுடியும்" என்று கேட்கிறார்கள்.

பணக்காரர்கள், தங்கள் லாபத்தில் நாலில் ஒன்று, மூன்றிலொன்று, பாதி, இன்னும் அதிகமாகவேக்கூட வருமானவரி கொடுக்கிறதாகவும் ஞாபகப்படுத்துகிறார்கள். ஆனால் ஏழைகளோ, தங்கள் கூலியை அப்படியே வாடகையாகக் கொடுத்துவிடவேண்டியதாயிருப்பதுடன் தாங்கள் சுதந்திரமாக இருந்தால் எவ்வளவு வேலை செய்யவேண்டியிருக்குமோ அதனிலும் இரண்டொரு மடங்கு தினசரி அதிகமாக உழைக்க வேண்டியதாயிருக்கிறதே என்பதை எடுத்துச்சொல்வோர் யாருமில்லை!

*

வால்டையர் (Voltaire) ரூசோ (Rousseou) காபட் (Cobbett) ஷெல்லி (Shelley) காரல்மார்கஸ் (Karl Marx) லாசல்லி (Lasalle) லெனின் (Lenin) ட்ராட்ஸ்கி (Trotsky) போன்ற அறிஞர்கள் இந்த ஏமாற்றுப் பிழைப்பை எடுத்துக் காட்டும் பொழுதெல்லாம் அவர்களை நாஸ்திகர்களென்றும், காலிகள், கொலைகாரர்கள், அயோக்கியர்களென்றும் எளிதில் சொல்லிவிடுகிறார்கள். இன்னும் அவர்களுடைய புத்தகங்களை வாங்குவதையோ, விற்பதையோ பெருங்குற்றமாக்கித் தண்டிக்கிறார்கள்.

அவர்களைப் பின்பற்றுகிறவர்கள் ஒரு புரட்சியை உண்டுபண்ணினால் இங்கிலாந்து முதலிய தேசம் உடனே அவர்களுடன் சண்டை போடுகிறது. மற்ற வல்லரசுகளுக்கும் அவைகள் தன்னுடன் சேர்ந்து புரட்சிக்காரர்களை அடக்கி ஒடுக்குவதற்கும் அடிமை வாழ்வை நிலைநாட்டுவதற்கும், பண உதவி செய்கிறது. இத்தகைய ஒப்பந்தம் வெற்றி அளித்தவுடன் அது ஆங்கில சுதந்திரத்தின் மற்றொரு வெற்றியென உலக முழுவதிலும் பறையடிக்கப்படுகிறது. கூலிவாங்கிப் பிழைக்கும் ஆங்கிலேய தொழிலாளிகளோ, இதற்காகத் துக்கப்படாமல் அவ்வெற்றுரையைப் போற்றிக் கொண்டாடுகிறார்கள்.

ரஷ்யாவில் 1922-ல் நடந்தது போல் புரட்சி வெற்றியடைந்தால் சண்டை ஓய்கிறது: ஆனால் அதைப்பற்றிய பொய்களும், வீண் புகார்களும், அவதூறுகளும் அத்தேசம் ஒரு முதல்தரமான படையுள்ள வல்லரசு ஆக வளரும் வரை அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றன.

நமது ராஜதந்திரிகளோ, புரட்சித் தலைவர்களை வருஷக்கணக்கில் எல்லோராலும் இகழத்தக்க போக்கிரிகள் மூர்க்கர்கள் என்று தூற்றிவிட்டு அப்புறம் அவர்களையே மரியாதையாக வரவேற்று விருந்து செய்கிறார்கள்.

*

இத்தகைய அளவுகடந்த அயோக்கியத்தனத்தால் — அடிமைத் தளைகளால் கட்டுண்டு கிடக்கும் மக்களை ஏமாற்றவேண்டுமென்று நினைத்தாலும் அது கடைசியாக முதலாளி வர்க்கத்தினருடைய முழு ஏமாற்றத்திலேயே முடிவடைகிறது.

ஒரு பணக்காரனை எடுத்துக் கொள்ளுங்கள். அவன் பணக்காரப் பிள்ளைகளுக்கான ஆரம்பப் பள்ளிக்கூடத்திலும் பின்னால் உயர்தரப் பள்ளியிலும் அதன் பின்னர் சர்வ கலாசாலையிலும் படிக்கிறான். அவனுடைய புத்தியானது ஒரு சாதாரணமான தொழிலாளியினுடைய புத்தியைவிட அத்தகைய இடங்களில் கற்பிக்கப்படும் பொய் நிறைந்த சரித்திரங்களினாலும், அயோக்கியத்தனமான பொருளாதார நூலினாலும் தானும் தன் வகுப்பினரும் மேலானவர்கள்

"இந்தியாவை எடுத்துக்கொண்டோமானால், ஆதிசங்கராச்சாரியார் ஒரு ஏழையே; ஆனால் அவருடைய சித்தாந்தங்களைக் கடைப்பிடித்தொழுகும் அவருக்குப் பின்னால் வந்த மடாதிபதிகள், சொத்து விஷயமாகவும், மடங்களின் பெயருக்குப் பிறரால் தானமாக விடப்பட்ட பொருள்களுக்காகவும், ஒருவருக்கொருவர் சதா கோர்ட்டு விவகாரங்களில் போராடிக்கொண்டே இருக்கின்றனர்."

—டாக்டர் பராஞ்பிபே

என்ற எண்ணங்களாலும் கெட்டுப் போய்விடுகிறது. அவன் தனது அகம்பாவத்தினால் தன்னுடைய உடைகளைச் சுத்தம் செய்தும் இன்னும் பல கூலி வேலைகள் செய்தும் பொருள் தேடுகிற தொழிலாளிகளைவிட தன்னை உயர்ந்தவனாகக் கருதிக்கொள்கிறான். தன்னுடைய நிலையை அவன் திருப்தியாக ஏற்றுக்கொள்கிறபடியால், அவன் தன்னை அத்தகைய திருப்திகரமான நிலையில் வைத்து, தன்னுடைய சக்திகளுக்கேற்ப மரியாதை வழங்கும் ஒரு முறை, முற்றிலும் நியாயமானதென்றும், அதன் பாதுகாப்பிற்காக தன்னுடையவும் நம்முடையவும் உயிரையும் கொடுக்கவேண்டுமென்றும், உண்மையாகவே நம்புகிறான். ஆனால் நாம் கேவலமாக நடத்துகின்ற—போதுமான கூலி கிடையாத தொழிலாளிகளும், உழவர், பயிர்த் தொழில் செய்வோர், சமுசாரி, வரிப் பளுவைத் தாங்கமாட்டாத சமுசாரிகளும் கூட இத்தகைய கனவானைப் போன்று இம்முறையில் உயர்வைப்பற்றி அவ்வளவு நிச்சயமாகக் கருதுவதில்லை.

*

அதிகாரிகள் இருக்கவேண்டுமாம்; அவர்களைக் கண்டு மக்கள் பயப்பட்டால்தான் அரசு சுகமாக நடக்கமுடியுமாம்; சுதந்திரம் ஜொலிக்கமுடியுமாம்! இதற்காக அந்த அதிகாரிகள் எப்படி இருக்கவேண்டுமாம், தெரியுமா? "விலையுயர்ந்த பட்டாடைகளால் அழகு பெறத் தங்களை அணிந்துகொள்ளவேண்டும். ஆபரணங்களால் அலங்கரித்துக்கொள்ளவேண்டும்; அதிகார தோரணையிலேயே பேசவேண்டும். நவரத்னங்களால் இழைக்கப்பட்ட ரதங்களிலேனும், உயர்ந்த ரகக் குதிரைகளிலேனும் பவனி வரவேண்டும். ரயில்களில் போக நேர்ந்தால், தனி வண்டிகளில் செல்லவேண்டும். தன்னுடைய காரியங்களை, சேவகர்களாலேயே செய்துகொள்ளவேண்டும். 'இம்' மென்றால், இருநூறு வேலையாட்களும், 'மணி' அடித்தால் பல பணியாட்களும் ஓடிவரவேண்டும்" இப்படியெல்லாமிருந்தால்தான் அதிகாரம் நடைபெறுமாம். சொல்லுகிறார்கள். ஏனென்று கேட்டால், 'அரிஸ்டாடில்'கூடச் சொல்லியிருக்கிறார், என்று சொல்ல ஆரம்பிக்கிறார்கள்.

இதிலிருந்து என்ன தெரிகிறது. அவர்கள் பொதுமக்கள் மனதிலே தெய்வசக்தி உடையவர்களாக விளங்க வேண்டுவதற்கான மட்டிலும் வேறு பயனொன்றுமில்லாவிட்டாலும் அவர்களுக்கு குபேர சம்பத்துடையவர்களாகக் காணும்படி செய்யவேண்டும். சுருங்கச் சொன்னால் மக்களை கீழ்ப்படிதலுள்ள வேலைக்காரர்களாகவும், சட்டத்திற்குப் பயந்து நடக்கும் குடிகளாகவும் இருக்கவேண்டுமானால் அவர்களை அறிவற்ற தலை வணங்கும் கோஷ்டியினராகச் செய்ய வேண்டுமாம்.

*

இவைகளுக்கெல்லாம் அடிப்படையாகவும் ஆதாரமாகவுமிருப்பது ஒரே ஒரு முக்கியமான—உபயோகமான கேள்விதான். தேச முழுவதிலிருந்தும் கிடைக்கின்ற வருமானத்தை தினசரி எப்படி பிரித்துப் பங்கிட்டால் நலமென்று பார்க்கவேண்டும், விவசாயத்தில் பூமியைப் பரந்த நிலங்களாகப் பிரித்து, மோட்டார் இயந்திரங்களால் உழுது பயிரிட்டும், ரசாயனக் கலைகளின் பிரகாரம் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட உரங்களிட்டும், விவசாயம் செய்கிறதாகவும் பொருளுற்பத்தியில் ஒரு சிறு பெண் நடத்தக்கூடிய பல இயந்திரங்களால் நிறையப் பெற்றதும் மின்சாரத்தின் சக்தியில் செலுத்தப்பட்டதுமான தொழிற்சாலைகள் பெருகியிருப்பதாகவும் வைத்துக்கொண்டால் விளையும் பயன்கள் எத்துணை பெரிதாக இருக்குமென்றால் நாம் அவைகளைச் சமமாகப் பங்கிட்டுக் கொடுப்பதாயிருந்தால் அதிகாரிகளுக்கும், விசாரணைக்காரர்களுக்கும் கலைவிற்பன்னர்களுக்கும் எவ்வளவு கிடைக்கிறதோ அவ்வளவுக்கு சாதாரணமான தேர்ச்சியற்ற தொழிலாளிகளுக்கும்கிடைக்கிறதாகவிருக்கும்.

ஆயிரம் பேரால் ஆக்கக்கூடிய பொருள்களை தற்கால இயந்திரங்கள் ஒரு பெண்ணால் ஆக்கக்கூடியதாயிருக்கின்ற கதைகளை நாம் கேட்கும்பொழுது இத்தகைய அபரிமிதமான அதிகரிப்பில் நாம் உண்ணவோ, குடிக்கவோ உடுக்கவோ முடியாததான ஊசிகள், இரும்பாணிகள்,எழுதுகோல்கள் முதலிய பொருள்களும் சேர்ந்திருக்கின்றனவென்பதை நாம் மறக்கக்கூடாது. பச்சைக் குழந்தைகள் ஊசிகளையும், நெருப்புக் குச்சிகளையும்கூடத் தின்னும். ஆனால் அவை ருசிகரமான உடம்புக்கேற்ற ஆகாரமன்று.

## —வாழ்ந்தோம், ஒரு நாள்!—

"காலிகோ," துணி என்று கூறுகிறோமல்லவா? கள்ளிக்கோட்டையில், அது ஆதியில் தயாரிக்கப்பட்டதால், அப்பெயர் வந்ததாம்! இப்படி இங்கு தயாரிக்கப்பட்ட துணிக்கு, இங்கிலாந்தில், ஏராளமான கிராக்கி ஏற்பட்டதால், 1701ல் ஆங்கில அரசு தடைபோட்டு, தன்னாட்டுக்குள் வரக்கூடாதெனத் தடுத்ததாம். இங்கிலாந்தில், ஆலைகள் அதிகமாகாத காலம், அது! பிறகு, லங்காஷயரும் மான்செஸ்டரும், பெரிய இடங்களாயின. அந்தத் துணிகளின் மார்க்கெட்டாக மாறிவிட்டது இந்தியாவென்று, தேசீய காங்கிரஸ், கூறி 'பகிஷ்காரம்' செய்தது. முதன்முதலில், சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்புதான் (1853ல்) பம்பாயில், முதல், துணியாலை ஏற்பட்டது. இந்த நூறு ஆண்டுகளில், இப்போது, மீண்டும் இங்கிலாந்து மிரளக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது! பம்பாய், லங்காஷயரையும் மான்செஸ்டரையும் மிஞ்சிவிட்டதாம்! இங்கிலாந்தின் பணத்தையெல்லாம் 'இந்தியா'வுக்குக் கொண்டுவருவதாகக் கூறி, தடுக்கவேண்டுமென ஒரு கிளர்ச்சி நடைபெற்றுவருகிறதுஇன்று. 'இந்தியா', என்று கூறப்படுவது, 'பம்பாய்'. இருநூறு ஆண்டுகளுக்கு முன், தெற்கே உள்ள, 'கள்ளிக்கோட்டை'யைக் கண்டு, இங்கிலாந்து மிரண்டது! பிறகு, ஆலைகளைக் கண்டுபிடித்து, இந்தியாவையே மிரட்டுகிற அளவுக்கு, இங்கிலாந்து வளர்ந்தது!! இப்போது அந்த இங்கிலாந்தையே மிரட்டுகிற அளவுக்கு பம்பாய் வளர்ந்துவிட்டது! பழம் புகழ்பெற்ற தென்னாடோ........? பரிதாபம்! பரிதாபம்!! தேசீயம் தந்த பரிசு இது. அரசுமட்டுமல்ல, தேசீய உணர்ச்சியை வளர்த்த காங்கிரசும்தான் காரணம். அகில இந்திய தேசீயம், பம்பாயைப் பணத்தோட்டமாக்கிவிட்டது. தெற்கையோ, தேயச் செய்துவிட்டது. இந்த உண்மையை உணரவேண்டுகிறோம், நண்பர்களே!

## —வீழ்ந்தோம், இன்று நாம்!!—

நீங்கள் ஒரு நாகரீகமான நாட்டில் வசித்தால் வரிகளும், விகிதங்களும் கொடுக்கும்படிசெய்து அதைச் செய், இதைச் செய்யாதே என்று பணிக்கின்ற மெய்க்காப்பாளர்களாலும், சேவகர்களாலும் (Police) பரிபாலிக்கப்படுகிற சட்டங்கள் உங்கள் சுதந்திரத்தைக் குறைத்துவிடுகின்றன. நீங்கள் இச்சட்டங்களை மீறினால் நியாயஸ்தலங்கள் உங்களை காராக்கிரகத்திலிடும், இன்னும் அதிக்ரமித்தால் உங்களுயிரைப் போக்கும். சட்டங்கள் நியாயமானதாக இருந்து பட்சபாதமின்றிப் பரிபாலிக்கப்பட்டால் குறைகூற நியாயமில்லை. ஏனென்றால் அவைகள் நம்மை, அடிபிடிச் சண்டைகள், வழிப்பறி, கொள்ளை முதலிய ஒழுங்கீனமான செய்கைகளினின்றும் காப்பாற்றுவதின் மூலம் நமது சுதந்திரம் அதிகரிக்கின்றது.

ஆனால் இன்று சமூகக்கட்டுப்பாடு அமைந்துகிடக்கும் நிலைமையில் உங்களை இன்னுமதிக நெருக்கமாகப் பிடித்துக்கொண்டிருக்கிற கட்டுப்பாடொன்று இருக்கிறது, அதுதான் உங்களுடைய முதலாளிகளுடையவும்,ஜமீன்தாரர்களுடையவும் அதிகாரம். நீங்கள் காளிக்குப் பதிலாக மாரிகோவிலுக்குப் போனதற்காக, அல்லது தான் குறிப்பிட்டவரை விட்டு வேறு யாருக்கேனும் வாக்குரிமை செய்தீர்களென்பதற்காக, அல்லது நீங்கள் கடை திறந்தீர்கள் என்பதற்காக அல்லது வைத்தியம் செய்கிறீர்கள் என்பதற்காக என்று ஏதோ ஒரு காரணம் சொல்லி நிலத்தைவிட்டு பணக்காரர்உங்களைஓட்டிவிடலாம்.

நீங்கள் இத்தனை மணி நேரம் வேலை செய்யவேண்டுமென்றும், உங்கள் ஆடைகளின் நிறம், அளவு விகிதங்கள்இப்படி இருக்கவேண்டுமென்றும் உங்கள் முதலாளி உங்களுக்குக் 'கட்டளையிடலாம். வேலையற்றவர்கள்' என்ற வாழ்க்கையில் சிதறிவாடும் பரிதாபகரமான கூட்டத்தில் சேர்ந்து நீங்கள் தெருவில் நிற்கும்படி எந்த நேரத்திலும் செய்துவிடலாம். அவன் உங்கள் மேல் செலுத்துகிற அதிகாரம் ஒப்பற்றது. அதற்குமுன் எந்த அரசியல் சர்வாதிகாரியின் அதிகாரமும் கூட எம்மாத்திரம்? இதற்கு உங்களுக்கு என்ன பரிகாரமிருக்கிறது? தொழிலாளிகளின் சங்கம் கையாளும் 'வேலை நிறுத்தம்' ஒன்றுதான். இது எதிரியின் வாசற்படியில் அவன் நியாயம் செய்யும்வரை உண்ணாவிரதமிருக்கிறதென்ற பழையதொரு கீழ்நாட்டவர் தந்திரமான சண்டித்தனம் தவிர வேறென்ன?

இந்த நாட்டிலோ மெய்காப்பாளர்கள் 'போலீசார்' உங்களை முதலாளிகளின் வாசற்படியில் பட்டினி கிடக்கவிடமாட்டார்களாதலால் உங்களுக்கு குடியிருக்க ஏதேனும் வீடு இருந்தால் அதில்தான் பட்டினி கிடக்கவேண்டும். வேலை நிறுத்தத்தில் அதி தீவிரமானது எல்லா வேலைக்காரர்களும் ஒரே சமயத்தில் செய்கிற பொது வேலை நிறுத்தம். அதுதான் மனிதர்கள் தவறிவிழும் பிழைகளிலும் அதி தீவிரமானதொன்றாகும். ஏனென்றால் அதைக் கடைசிவரை கொண்டுவந்ததினால் மனித வர்க்கமே ஒருவாரத்தில் அழிந்துவிடும். தொழிலாளர்களே முதலில் உயிர் துறப்பர். அதனால் பொதுவேலை நிறுத்தமென்பது தொழிலாளர் சங்கம் பைத்தியம் பிடித்தாகும். ஒரு சமயத்தில் ஒரு வேலை நிறுத்தத்தை நடத்தி மற்றைய தொழிலாளர்கள் எல்லாம் அதிகமாக உழைத்து அதற்கு உதவிசெய்வதே தொழிலாளர் சங்கத்தின் புத்திசாலித்தனமாகும்.

*

நீங்கள் 12–மணி நேரமும் வேலை செய்ய வேண்டியதாய் இருந்தால் உங்களுக்குச் சுதந்திரமே இல்லை. நீங்கள்8-மணிநேரம்வேலை செய்தால் உங்களிஷ்டப்படி நடக்கஉங்களுக்கு 4-மணி காலம் கிடைக்கும். அதுவும் நாட்டுச்சட்டதிட்டங்களுக்குட்பட்டு படக் காட்சிகளையோ, பந்தய விளையாட்டுகளையோ பார்ப்பதற்கோ, கவர்ச்சியுள்ள புத்தகத்தை வாங்குவதற்கோ இன்னும் உல்லாசமாகப் பொழுது போக்குவதற்கோ தேவையான காசு கையிலிருந்தால்தான் கிட்டும். இதிலும் இயற்கையால் விளையும் இன்னல்கள் பல. உங்களுடைய 8-மணி நேர வேலையும், உங்கள் உடலுக்கு அதிக வருத்தத்தைக் கொடுக்கும் உழைப்பாயிருக்கலாம். வீட்டிற்குப்போனதும் மீந்த 4-மணி நேரத்தையும் என்னுடைய புத்தகங்களை வாசித்து அறிவை வளர்க்க விரும்புகிறீர்கள். ஆனால் பாவம் அரை நிமிஷத்தில் அயர்ந்து தூங்கிவிடுகிறீர்கள். உங்கள் அறிவு இப்பொழுதிருக்கிறபடியே இருக்க நேரிடுகிறது.

*

சுதந்திரத்தை, அதனுடைய பழைய ஆங்கிலப் பேரான "ஓய்வு காலம்" என்றே அழைக்கவேண்டும். உண்மை உழைப்பின் பிரதிபலனாக அதிகமான ஓய்வு நேரத்திற்கும், அதனை இன்புறக் கழிப்பதற்காக அதிகமான பொருளுக்காகவும் கிளர்ச்சி செய்துகொண்டு இருக்கவேண்டும். பிரிட்டானியா இந் நிலை எய்தும்வரை. ஆளுக என்று கூச்சல் போடுவதை நிறுத்தவேண்டும், அதுவரை நமது சுதந்திரம், அதின்பேரில் நமக்குள்ள நாட்டம், ஆகியவைகளைப்பற்றிப் பேசுகிற எந்தப் பாராளுமன்ற அபேட்சகர்களுக்கும் நமது வாக்குரிமையை வழங்கக் கூடாது. ஏனென்றால் அவன் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவனாயினும் அவனுடைய உள்ளத்திலே அவன் தன் தகுதிக்கேற்ப சட்டங்களுக்கும் அகப்படாமல் நம்முடைய உழைப்பினால் வாழ விரும்பும் வீணனாகவே இருப்பான்.

வழக்கத்திற்கு மாறாக நமக்கு ஏராளமான ஓய்வுகாலமும் பணமும் கிடைக்கிறதாக வைத்துக் கொள்வோம். அவைகளினால் என்ன செய்யப்போகிறோம். சிறு பிராயத்திலே சோம்பலாயிருப்பவர்கள் தீய எண்ணங்களால் தூண்டப்படுவரென்றும் "சோம்பரென்பவர் தேம்பித் திரிவர்" என்றும் படித்திருக்கிறேன். மனிதருக்குப் பவிசு வந்தகாலையில் அவர்கள் இன்பத்தையும், சுகத்தையுமிழந்து, கடைசியாக நல்லுண்டி அருந்துவதற்குப் பதிலாக விஷமுண்டவரைப்போல் உயிரிழக்கவும் நான் பார்த்திருக்கிறேன். நாம் சரியாகப் பழக்கப்பட்டிருந்தாலன்றி நமது ஓய்வு காலங்களைக் கழிக்கும் வகையைத் தெரிந்துகொள்வது எளிதான காரியமே அல்ல.

ஆகையால் நீங்கள் தடுமாற்றமடையக்கூடிய ஒரு தந்திரமான கேள்வி போடுகிறேன் அதனைச் சிந்தனை செய்யும்படி செய்து நான் எனது பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன் தினசரி 8-மணி நேரம் வேலை செய்து நாற்பத்தைந்தாவது வயதில் உபகாரச் சம்பளத்துடன் ஓய்வெடுத்துக் கொள்வீர்களா? அல்லது தினசரி நான்கு மணி நேரம் வீதம் எழுபதாவது வயது வரை உழைப்பீர்களா? உங்களிஷ்டப்படி விட்டால் எதை விரும்புவீர்கள்? இதற்குப் பதில் தயவுசெய்து எனக்கு அனுப்பவேண்டாம். உங்கள் மனைவியுடன் கலந்துபேசுங்கள். ★

# ஆராய்ந்து அலசிப் பார்த்த பின்னரே...!

அற்ப விஷயம்! சிறு சம்பவம் — சாதாரண நிகழ்ச்சி-மனித வாழ்வில் அன்றாடம், அவ்வப்போது ஏற்படக்கூடிய தவிர்க்கமுடியாத சிறு சிறு தவறுகள் — பெரியவர்கள், சிறியவர்கள் என்ற வேறுபாடின்றி எவராலும் செய்யப்படக்கூடிய சாதாரண பிழைகள் — எதிர்பாராமல் ஏற்படும் தவறுகள்—மறதியால் செய்யப்படும் குற்றங்கள்—தவறுதலாகச் செய்யப்படும் பிழைகள் — அறியாமையால் ஏற்படும் அற்பப் பிழைகள் — சந்தர்ப்பம் உண்டாக்கும் சாதாரண தவறுகள்—சூழ்நிலையால் ஏற்படும் குற்றங்கள் என்று எத்தனையோ கூறலாம்.

இவையெல்லாம் "அற்பவிஷயம்" என்ற இரண்டு சொற்களைச் சாட்சிக்கழைத்து மன்னிப்பைப் பெறக்கூடிய மிகமிகச் சர்வ சாதாரணமான சிறு பிழைகள். தவறே செய்யாமல் வாழவேண்டுமென்ற கடுமையான விரதத்தைக் கடைப்பிடித்தவர்கள்கூட இப்படிப்பட்ட சாதாரண தவறுகளுக்கு இலக்காகாமல் தப்பித்துக்கொள்ள முடிவதில்லை.

காலையில் வெளியே சென்ற கணவன் இரவு இரண்டு மணிக்குமேல் வீடு திரும்புகிறான். குழந்தை குட்டிகளுடன் குடும்ப பாரத்தைச் சுமந்துகொண்டு, கணவன் வீடு திரும்பிய பின்னரே கஞ்சி காய்ச்ச வேண்டுமென்ற கவலையோடு மனைவி இருக்கிறாள் — தூக்கம் பிடிக்கவில்லை. அந்தச் சமயத்தில் தான் கணவன் வீட்டுக்குள் நுழைகிறான். தூங்காமல் விழித்துக் கொண்டிருக்கும் மனைவியைப் பார்க்கிறான். உடனே அவனுக்குத் தன் மனைவிமீது சந்தேகம் ஏற்பட்டு விடுகிறது. அவளை ஒரு கொட்டகையில் போட்டுப் பூட்டிவிட்டு, அந்தக் கொட்டகைக்கு நெருப்பு வைத்துவிடுகிறான். அவள் வெந்து சாம்பலாகிறாள். அவனுக்கு மரண தண்டனை கிடைக்கிறது—சட்டப்படி.

ஆனால், கணவன் தன்னுடைய மனைவியைஉயிரோடு நிற்கவைத்து நெருப்பிட்டுக் கொன்றானே, அப்படிக் கொல்லப்படுவதற்கு அவள் செய்த குற்றமென்ன? இரவு இரண்டுமணியாகியும் தூங்காமல் இருந்ததுதான்.

"ஏன் இவள் இன்னும் தூங்காமல் இருக்கிறாள்? காலமோ இரவு! மணியோ இரண்டு! அதனையும் கண்ணை விழித்துக்கொண்டிருப்பதற்குக் காரணம் என்ன? என்ற ஆராய்ச்சியில் இறங்கிய அந்த அவசரபுத்தி படைத்த கணவன், தன்னுடைய ஆராய்ச்சியின் முடிவே அசைக்கமுடியாத ஆதாரமாக நின்று, வயிறாரக் கஞ்சி கிடைக்கவில்லையே என்ற கவலையால், குழந்தைகளோடு குமுறிக் கொண்டிருந்த தன் மனைவியை நெருப்பிட்டு கொல்லும்படி செய்துவிட்டது. இப்படி, உண்மை எது என்பதை அறிவதற்குமுன் அவசரப்பட்டு அடாத செயல் புரிவோரை அவனியில் அரை விநாடியும் விட்டுவைக்கக்கூடாது—ஒப்புக் கொள்கிறோம்.

ஒருவன் வெளியூருக்கு ஏதோ வேலையாகச்சென்று, இரவுஇரண்டு மணிக்குமேல் வீட்டுக்கு வந்து கொண்டிருக்கிறான். வண்டியில் உட்கார்ந்து கொண்டு அசதியால் தூங்கிவிழுந்தபடி வருகிறான். சுங்கச் சாவடி வந்ததும் வண்டி நிறுத்தப்படுகிறது. சுங்கக்காவலாள் கட்டணம் வசூலிக்க வண்டியருகில் வந்துநிற்கிறான். வண்டிக்குள் தூங்கிக் கொண்டிருந்தவர் விழித்துப் பார்க்கிறார். வண்டியருகில் ஒரு ஆள் நிற்கிறான். அவருக்குச் சந்தேகம் உண்டாகி விடுகிறது. தன்னைத் தாக்கத்தான் தயாராக நிற்கிறான் என்ற முடிவுக்கு வந்து விடுகிறார். உடனே தன்னிடமிருந்த கைத்துப்பாக்கியை எடுத்துச் சுடுகிறார். குறி, தவறவில்லை. சுடப்பட்டவன் குப்புற விழுகிறான். ஆனால், முடிவென்ன? சுட்டவரைச் சட்டம் சட்டைசெய்யவில்லை. அவர் சுகமாகவே இன்னும் இருக்கிறார்.

சுங்கக் காவலாளியைச்சுட்டாரே, அவர், தாம் செய்த குற்றத்துக்குப் பரிகாரமாக என்ன செய்தார் தெரியுமா? தன்னுடைய துப்பாக்கியையும் சுடுவதற்குச்சர்க்காரால் அளிக்கப்பட்ட அதிகாரத்தையும் (லைசென்ஸ்) சர்க்காரிடம் ஒப்படைத்து இனிமேல் கொலைசெய்யும் கருவிகளைக் கண்ணாலும் பார்ப்பதில்லை என்ற விரதத்தை மேற்கொண்டு விட்டாராம்.

கொலைக்கருவி கையில் இருந்தால், குற்றமற்றவர்களைக் கூடக் கொலை செய்ய நேரிடும் என்ற 'புனிதமான' முடிவுக்கு வந்தவரே, பின்னர் பலரின்கொலைக்குக்காரணமானார் என்று கூறினால், யாரும் ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது. கொலைக் கருவியைக் கையிலேந்தாத அந்தப்புனிதர், பிறகு, பல சந்தர்ப்பங்களில் தன்னுடைய கையாட்களைக்கொண்டு பல கொலைகளைச் செய்திருக்கிறார்.

**தூய உள்ளம் படைத்த தன் மனைவியிடம் சந்தேகம் ஏற்பட்டு அவளைக்கொன்றானே, ஒரு கொலைகாரன். அது போன்ற சந்தேகம் இந்த ஆசாமிக்கும் ஏற்பட்டுப் பலர் கொலையுண்டிருக்கின்றனர்.**

முன்னது, சமுதாய விவகாரங்களைச் சரிவர உணரமுடியாத முட்டாள்தனத்தால் ஏற்படுவது.

பின்னது, அரசியல் வியூகம் அனுவளவும் இல்லாத அப்பாவித்தனத்தால்அவ்வப்போது ஏற்படும் கொடுமை.

முன்னது, அறியாமையால் செய்யப்படுவது.

பின்னது, அளவுக்கு மிஞ்சிய 'அறிவாளி'களால் செய்யப்படுவது.

முன்னது, பதட்டத்தால் செய்யப்படுவது.

பின்னது, பதவியின் பலத்தால் செய்யப்படுவது.

அடிகள்

முன்னது, முச்சந்திக்கு வந்து விடும்.

பின்னது, மூலையில் படுத்துக் கிடக்கும்.

*

அன்பர் ஆச்சாரியார் இருக்கிறாரே, அவரைப் பற்றிய பல ருசிகரமான சம்பவங்கள் பலருக்குத் தெரியாது.

முதலில், அவரைப் பற்றிய ஒரு மிகமிக முக்கியமான தகவலை உங்களுக்கு அறிவித்துவிட்டு, அடுத்தபடியாக வேறு இரண்டொரு சம்பவங்களையும் கூறுகிறேன்.

**"ஆராய்ந்து அலசிப்பார்க்காமல் எந்தக் காரியத்தையும் ஆச்சாரியார் செய்வதில்லை."**

மறந்துவிடாதிர்கள் இந்த வாசகத்தை! ஒன்றை ஆராய்வதோடு மட்டும் நின்றுவிடுவதில்லை அன்பர் ஆச்சாரியார். தாம் ஆராய்ந்ததை நன்றாக அலசிப்பார்த்த பின்னரே, எந்தக் காரியத்தையும் அவர் செய்வது வழக்கமாம். படித்தவர்களுக்கு அடையாளம் எதனையும் பகுத்தறிந்து பார்ப்பதுதான் என்பதற்கு ஆச்சாரியார் ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறாராம். இதோ ஒரு உதாரணம்:—

"ஒரு நாள் ஆச்சாரியார் கோர்ட்டுக்குப் புறப்படும் தருணத்தில் ஒரு பாலக்காட்டு நபர் வந்து, தாம் ஏழை உபாத்தியாயர் என்றும், திருப்பதிக்குப்போன இடத்தில் 'பர்ஸ்' பறிபோய்விட்டதாகவும் கூறி உதவி கேட்டார். அதற்கு, ஆச்சாரியார், "சரி இங்கே சாப்பிடுங்கள், கச்சேரிக்குப் போய்விட்டு வந்து பார்க்கிறேன்" என்று கூறிவிட்டு, தந்தி ஆபீசுக்குப்போய் அந்த உபாத்தியாயர் சொன்ன பள்ளிக்கூடத்துக்குத் தந்தி கொடுத்துக்கேட்டார்,—"அப்படியொரு ஆசாமி அந்தப் பள்ளிக்கூடத்தில் கிடையாது" என்று பதில் வந்தது. போலி உபாத்தியாயர் போலீசில் ஒப்படைக்கப்பட்டு வழக்கு நடந்தது. விசாரணையின் போது, அந்த உபாத்தியாயர் சார்பில் ஆச்சாரியாரே ஆஜராகி அவருக்கு விதிக்கப்பட்ட பத்து ரூபா அபராதத்தையும் தம்முடைய பர்சிலிருந்தே எடுத்துக் கொடுத்தாராம்.

இந்தச் சம்பவம் இருக்கிறதே! இது, ஆச்சாரியாரின் ஆராய்ந்து அலசிப்பார்க்கும் இயல்புக்கு இன்றியமையாத ஒரு எடுத்துக்காட்டாகும் என்று அவரைப் "பாரத ரத்ன"மாக்கியதைக் கண்டு மகிழ்பவர்கள் கூறுகிறார்கள். உண்மை! நாமும் இந்தப் பண்பைப் பாராட்டுகிறோம். போலிவேடம் பூண்டு உலகை ஏமாற்றிப் பிழைப்பதையே தொழிலாகக் கொண்டுள்ள புல்லர்களுக்கும்புரட்டர்களுக்கும் சரியான பாடம் கற்பிக்கவேண்டியதுதான்.

தொழில்வளர்ச்சி—நாட்டின் உயிர் நாடி.

**புதுயுகம் சொல்கிறது!**

# நாமோ, இருளில் கிடக்கிறோம்!
# ஏமாறுகிறோம், டில்லியால்!!

இதனை விளக்க-மக்களுக்குச் சொல்ல

## மார்ச்சு 20-ல் நாடெங்கும்

# ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாள்!

தி. மு. க.

ஆனால், இன்னொன்றையும் நாம் கவனிக்கத் தவறிவிடக்கூடாது. ஆச்சாரியாரால் அறிமுகப்படுத்தப்பட்ட அந்தப் பாலக்காட்டு ஆசாமி, ஒரு போலி உபாத்தியாயர் என்று பள்ளிக்கூட மானேஜ்மெண்டாரே சாட்சியம் அளித்தபின், அந்த உபாத்தியாயர் சார்பில் யாரும் வாதாடவேண்டிய அவசியமே இல்லை. என்றாலும், எதனையும் ஆராய்ந்து அலசும் ஆச்சாரியார், தாமே வலிந்து சென்று வாதாடி, கோர்ட்டாரால் விதிக்கப்பட்ட அபராதத் தொகையையும் தாமே கட்டினாராம். "பிள்ளையைக் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுவது" என்ற பழமொழி இப்படிப்பட்ட ஆராய்ந்தலசும் ஆச்சாரியார் போன்றவர்களின் செய்கைகளால்தான் ஏற்பட்டதென்று கூறினால், அதை யார் இல்லையென்று மறுக்கமுடியும்?

சட்டமாகிய இருளை நீக்க வக்கிலின் வாதமாகிய விளக்கைத் தேடிய அந்த உபாத்தியாயர் ஒரு வகையில் நல்ல அதிர்ஷ்டசாலிதான் என்றே கூறலாம். காரணம்: வாதியே பிரதிவாதியின் சார்பில் ஆஜராகி அனுகூலஞ் செய்திருக்கிறார். இது எப்படியோ போகட்டும்; நாம் ஏன இதைப்பற்றி இன்னும் நீண்ட ஆராய்ச்சி செய்ய வேண்டும்?

இதோ ஆச்சாரியாரின் ஆராய்ந்து அலசும் இயல்புக்கு இன்னொரு எடுத்துக்காட்டு:—

"இந்த ராஜாஜி துப்பாக்கி ஏந்தியவர் என்று சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள். ஆனால் இது உண்மை. நாமக்கல்லுக்குத் தொழில் நிமித்தமாய் போய்விட்டு இரவில் குதிரை வண்டியில் சேலத்திற்குத் திரும்பி வந்துகொண்டிருந்தார் அசதியால் உறங்கிவிட்டார். சுங்கச் சாவடியில் வண்டி நிறுத்தப்பட்டது. காவலாளி அந்த வண்டிக்குப் பின்னால் கட்டணம் வசூலிக்க வந்தான். திடீரென்று ஆச்சாரியார் எழுந்து, யாரோ தம்மைத் தாக்க வந்துவிட்டதாக நினைத்து துப்பாக்கியால் சுட்டுவிட்டார். குறியும் தவறவில்லை"

எப்படியிருக்கிறது அன்பர் ஆச்சாரியாரின் ஆராய்ந்து எதனையும் அலசிப் பார்த்தபின்னரே காரியமாற்றும் கண்ணியமான போக்கு!

வண்டியில் பிரயாணம் செய்பவர்கள் பலர், ஆச்சாரியாரின் இந்த முறையைக் கையாளத் தவறுவதில்லை. கார், பஸ், ரயில், கட்டை வண்டி, குதிரை வண்டி எதில் பிரயாணம் செய்தாலும் தூங்கி விழுந்து பக்கத்தில் இருப்பவர்கள் மீது கூட மோதிக்கொள்வதுண்டு. ஆச்சாரியாருக்கு மட்டும் இது விதிவிலக்கல்ல. ஆனால் இந்தத் தூக்கம் இருக்கிறதே, ஆச்சாரியாரின் தூக்கத்துக்குக் கூறப்பட்ட காரணம் போல் அசதியால் ஏற்படுவதல்ல. வண்டிகளின் அசைவு இயற்கையாகவே பலருக்கு இந்தத் தூக்கத்தை உண்டாக்கி விடுகிறது. அதிலும் ஆச்சாரியார் மற்றவர்களைப்போல் மண்வெட்டி எடுத்தோ

கோடரி தூக்கியோ அசதி ஏற்படக் கூடிய வகையில் அங்கத்தை ஆட்டியசைத்து வேலை செய்து விட்டு வண்டியில் வரவுமில்லை. எனவே வண்டியில் ஏற்படும் தூக்கத்துக்கு அசதியைக் காரணமாகக் காட்டுவது, ஆச்சாரியார் மீது அலாதியான பிரியம் காட்டுவது என்று வேண்டுமானால் கூறலாமே யொழிய, வண்டித் தூக்கத்துக்கு அசதியைக் காரணமாகக் காட்டுவது அவ்வளவு பொருத்தமாக இல்லை.

சுங்கச்சாவடியில் ஆச்சாரியாரின் வண்டி நிறுத்தப்பட்டதும், ஆச்சாரியார் விழித்துக்கொள்கிறார். வண்டிக்குப் பின்னால் யாரோ ஒருவர் நிற்பதைப் பார்க்கிறார். ஒரு முடிவுக்கு வருகிறார். பின்னால் நிற்பவன் தம்மைத் தாக்கத்தான் வந்து நிற்கிறான் என்பது ஆச்சாரியாரின் ஆராய்ந்து அலசிய முடிவாகிறது. உடனே கைத் துப்பாக்கியை எடுக்கிறார். **குறி தவறாது குண்டுபடவே எதிரில் நின்றவன் கீழே சாய்ந்துவிடுகிறான்.**

ஆச்சாரியாரின் இந்த ஆராய்ந்தலசிய முடிவை, மேற்படி சம்பவத்தை ஊன்றிக் கவனிக்கும் எவரும், அவருடைய ஆராய்ந்தலசும் கருவி பெரிய பெரிய பொத்தல்களையுடையதாக இருக்கிறதென்பதை மிக எளிதாக அறிந்துகொள்வர்.

ஆச்சாரியார் வண்டியில் வந்து கொண்டிருக்கிறார். வண்டி எல்லோரும் நடமாடக்கூடிய பொது வழியாகத் (Public Road) தான் வந்து கொண்டிருக்கிறது அப்படிப்பட்ட பொதுப் பாதையில் ஆச்சாரியாருடைய வண்டி மட்டும்தான் வரலாம் போகலாம் என்ற சட்டம் எதுவும் இல்லை. எனவே, வண்டிக்குப் பின்னால் நின்றவர் ஒரு கால்நடைப் பிரயாணியா அல்லது சுங்கச் சாவடிக் காவலாளியா என்று ஒரு விநாடி சிந்தித்துப் பார்த்திருக்கலாம். அல்லது அப்படி நின்றவரின் கையில் யாதாயினும் கொலைக் கருவி இருக்கிறதா என்று கவனித்திருக்கலாம். தெரு, நமக்கு மட்டுமல்ல, நாட்டிலுள்ள எல்லோருமே நடமாடும் இடம் என்றெண்ணும் பொது அறிவையாவது சிறிது பயன்படுத்திப் பார்த்திருக்கலாம். எப்படிப்பட்ட யோசனையுமின்றித், தம்முடைய வண்டிக்குப் பின்னால் நின்றவன் தம்மைத் தாக்கவே வந்திருக்கிறான் என்ற முடிவுக்கு வந்து துப்பாக்கி ஏந்தும் துணிவைப் பெறும் ஒருவரை, எதனையும் ஆராய்ந்து, ஆராய்ந்ததை அலசி, அதன் பின்னரே எந்தக் காரியத்தையும் செய்பவர் என்று கூறப்படுவதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?

*

இப்படி ஆராய்ந்து அலசும் ஆச்சாரியார்தான், அண்மையில் ஒரு கூட்டத்தில் பேசும் சந்தர்ப்பம் கிடைத்தபோது, **"மரண தண்டனையை ஒழிக்கக்கூடாது"** என்று மிக அழுத்தமாக அறைகூவிப் பேசியிருக்கிறார். அந்தச் சமயத்தில்தான் நாம் மேலே குறிப்பிட்ட கணவன் மனைவி கதையை மேற்கோள் காட்டிக் கொலை செய்தவனுக்கு மரண தண்டனை அவசியம் என்பதை வலியுறுத்திப் பேசியிருக்கிறார். ஆச்சாரியாரின் வாதப்படி நாமும் இந்த வாதத்தை ஒப்புக்கொண்டு, ஆச்சாரியாரின் சுங்கச்சாவடித் துப்பாக்கிப் பிரயோகத்தையும் 13–2–55ல் வெளிவந்த ஆனந்த விகடனில் கண்டபடி நாம் இங்கு குறிப்பிட்டிருக்கிறோம். இந்த இரு சம்பவங்களையும் சீர்தூக்கிப் பார்த்து ஒரு நல்ல முடிவு காணும் பொறுப்பை வாசகர்களுக்கே விட்டுவிடுகிறோம்.

ஆச்சாரியாரால் கூறப்பட்ட கணவன் மனைவி கதை, கொலை செய்தவனுக்கு மரண தண்டனை அளிக்க வேண்டுமென்ற அவசியத்தை வற்புறுத்த ஆச்சாரியாரால் கையாளப்பட்ட ஒரு கற்பனையாகும். ஆனால், சுங்கச்சாவடித் துப்பாக்கிப் பிரயோகம் உண்மையாக நடைபெற்ற சம்பவமாகும்.

*

**அற்ப விஷயம்**—இதற்காக எந்தக் கணவனும் தன் மனைவிமீது சந்தேகப்பட்டு உயிரோடு நெருப்பிலிட மாட்டான். பல நாட்கள் பார்த்துத் தன் மனைவியின் தவறான செயலைத் தாங்கிக்கொள்ளமுடியாத நிலையில் தான், ஒருவன் தன் மனைவியைக் கொடுமைப்படுத்த முற்படுவான். ஆனால் சில சமயங்களில் ஆச்சாரியாரின் கணவன் மனைவி கதை போன்ற சம்பவங்களும் நடப்பதுண்டு. ஆச்சாரியார், அவசரப்பட்டுச் சுங்கச்சாவடி செய்தது போல் செய்பவர்கள் நாட்டில் இல்லாமலில்லை.

*

கொலை செய்தவனுக்கு மரண தண்டனை தரப்படவேண்டுமா வேண்டாமா என்பதை ஆராய இதை நாம் எழுதவில்லை. ஆச்சாரியார் இவ்விதம் பேசுகிறாரே, இது அவருடைய வாழ்க்கை முறையோடு ஒத்து வருகிறதா என்பதை எல்லோரும் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதற்காகவே இதனை எழுதுகிறோம்.

உலகின் பல நாடுகளிலும், இன்று, மரண தண்டனை அவசியமா என்று பேசப்பட்டு வருகிறது.

ஆனால், கொலைசெய்தவனுக்கு மரண தண்டனை தரப்படவேண்டுமென்பதற்கு ஆச்சாரியார் கூறும் காரணமிருக்கிறதே, அதுதான் இங்கு குறிப்பிடத்தக்கது.

"கொலைசெய்தால் அது தூக்குத்தண்டனையில் கொண்டுபோய் விடும் என்ற எண்ணம் இருந்தாலொழிய ஒருவன் மற்றொருவனைக் கொல்வது நிற்காது."

இது ஆச்சாரியாரின் அசைக்க முடியாத வாதமாகும்.

ஒருவன் இன்னொருவனைக் கொலை செய்யும் சூழ்நிலை ஒருவனுக்கு ஏற்படுகிறதென்று வைத்துக்கொள்வோம். அப்போது, அவன், தான் செய்யும் கொலை—தன்னை மரண தண்டனைக்கு உள்ளாக்கும் என்று எண்ணி, அந்தக் கொலை செய்வதை நிறுத்திக் கொள்வானா? அப்படி நிறுத்திக் கொள்ளும் நினைப்பையாவது அந்தச் சந்தர்ப்பம் அவனுக்கு உண்டாக்குமா? அல்லது இதுவரை அப்படிப்பட்ட தூய எண்ணம் உண்டாகிக் கொலைசெய்வதை எத்தனைபேர் நிறுத்தியிருக்கிறார்கள் என்பனபோன்ற சில அடிப்படை உண்மைகளை எண்ணிப்பார்க்கும் இயல்பு நம்மைவிடச் சட்டம் பயின்று அத்துறையில் பழகியவர்களே அதிகம் அறியமுடியும். அதிலும் இனிமேல் கையினால் கொலைக் கருவிகளைத் தொடுவதில்லை என்று கங்கணம்கட்டிப் பொதுவாழ்வில் ஈடுபட்டுத் தம்முடைய கையாட்களிடம் கொலைக் கருவிகளைத் தந்து, நாட்டின் நாயகர்களாக இருந்து கல்லக்குடி தூத்துக்குடிகளைக் காண்பதற்குமுன் தாலமுத்து நடராசன்களைச் சந்தித்து அவர்களைச் சாக்காட்டுக்கு அனுப்பி மகிழ்ந்த ஆச்சாரியார் போன்றவர்கள் இன்னும் தெளிவாக உணர முடியும் என்பதோடு இதனை முடிக்கிறோம்.

★

திராவிடநாடு

காஞ்சி] 6—3—55 [ஞாயிறு

# மன்னிக்க முடியாது

★

'அகோ வாரும் பிள்ளாய் மந்திரி! நமது ராஜ்யத்தில் மாத மும்மாரி மழை பொழிகிறதா?'' என்று மன்னன் கேட்க, ''ஆம் மகாராஜா'' என்று மந்திரி தலை அசைக்க, நடைபெறும் நாடகம் அல்ல, நாடாள்வோரின் நிலை. நாட்டின் நாடிகளை அறிந்தும், நாட்டு மக்களுடைய வாழ்க்கைப் போக்கைத் தெளிவாக விளங்கிக்கொண்டும் அதற்கேற்ற வகையில், தமது ஆட்சியை நடத்தும் உன்னதமான பொறுப்பில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

எனினும், நாடாளும் வாய்ப்புப் பெற்ற நமது 'எஜமானர்'களின் போக்கைக் காணும்போது, நகைப்பதா அழுவதா என்றே தெரியவில்லை. தாயகத்தை ஆளும் அரசும், அவர்களை ஆட்டிப் படைக்கும் 'டில்லி' அரசும், அண்மையில் படைத்திருக்கும் 'வரவு செலவு'களைப்பற்றியும், அதன் காரணமாக சுமத்தப்படும் புது வரிகளையும் பார்க்கும்போது, உண்மையிலேயே இவர்களை எந்த ரகத்தில் சேர்ப்பதென்றே தெரியவில்லை. மக்கள் நிலை அறியா மமதையாளர்கள் என்று சொல்ல, இவர்கள் மணிமுடி தரித்தவர்களல்ல! ஏழைகளைக் கசக்கிடும் எத்தர்கள் என்றும் தீர்மானமாகச் சொல்லமுடியவில்லை—ஏனெனில், சில சமயங்களில் அவர்கள் தேம்பி வடிக்கும் சோகக் கண்ணீரையும் காண நேர்வதால்.

பிறகு, யார் இவர்கள்? ஏன் நாடாள வந்தார்கள்? — என்று எண்ணினால், வியப்பும் வேதனையும்தான் அதிகமாகிறது. இவ்வளவு பெரிய இந்தியத் துணைக் கண்டத்திலேயே வாழ்வுக்கும் சாவுக்கும் போராடிக்கொண்டிருப்போர், விவசாயிகளாகும். அதைப் போல, சாகாமலும் வாழாமலும் சங்கடத்தில் உழன்றுகொண்டிருப்போர் மத்யதர மக்களாகும். இவர்களே நாட்டின் குடிமக்கள். சிம்மாசனங்களைத் தரவும் பறிக்கவும் சக்திவாய்ந்த வர்க்கம், இது. இவைகளின் தலையில், வெள்ளையனால் ஏற்றப்பட்ட சுமைகளை இறக்குவதற்காக அரசபீடத்திலமர்வதாகப் பேசினார்கள், இன்றைய ஆளவந்தார்கள். ஆனால், அரசபீடத்திலமர்ந்ததும், இவ்வளவு மோசமாகவா ஆகவேண்டும், அவர் தம் கருத்தும் போக்கும்.

நிதியமைச்சர் தோழர் சுப்ரமணியம், சின்னாட்களுக்குமுன்பு செப்பினார், சட்டசபையில், தான் விவசாயக் குடியில் பிறந்தவர் என்று. அந்த வீரரின் வரவு செலவுத் திட்டத்தில், விவசாயிகள் தலையில் வரி சுமத்தப்பட்டிருக்கிறது. நீர் வரி, நில வரி — இரண்டிலும் உயர்வு செய்யப்பட்டிருக்கிறது. ஏழைகள் உபயோகிக்கும் 'சிகிரெட்' வகைகளுக்கும் வரி போடப்பட்டிருக்கிறது. அதே போல, டில்லி தர்பார் மத்யதர மக்களின் இன்றியமையாத பொருளாகிவிட்ட சர்க்கரையின் விலை உயருமாறு செய்திருக்கிறது. கைக் குழந்தை அழுதால்கூட 'இந்தாம்மா' என்று தித்திப்பு தரவேண்டி இருக்கிறது—சிறு விழா முதல், சாதாரண சம்பவமானாலும்கூட, சர்க்கரை இல்லாமல் காரியங்கள் நடப்பதில்லை. அதற்கு வரி வீசப்பட்டிருக்கிறது!

*

''ஆடம்பரமாக வாழ்கிறார்கள்!''

''அடாபிடிச் செலவு செய்கிறார்கள்!''

''பணச் செலாவணி, தாங்க முடியவில்லை''

''இஷ்டம்போல் ஏராளமான பணத்தைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்''

என்பதாக, ஒரு நிலைமை இருக்குமானால் அத்தகைய மக்கள் மன்றத்தில் ததும்பி வழியும் பணத்தை, தக்க வரிகள் மூலம், சர்க்காரின் கஜானாவுக்குக் கொண்டு சென்று, அதன் மூலம் நாட்டுக்கு நன்மை பயக்கும் பல காரியங்களைச் செய்வதில் தவறில்லை. வரியில்லாது, எந்த அரசும் வாழ முடியாதுதான்! ஆனால், குருவித் தலையில் பனங்காயை வைப்பதும், யானை முதுகிலும் அதே பனங்காயை வைப்பதும், இரண்டுக்கும் சமநீதி வழங்குவதாகப் பேசுவதும், தக்கவர்கள் செயல் அல்ல. அரசும், நாடும், மக்கள் மகிழ்ந்து உலாவவேயொழிய, தலையில் கை வைத்துக் கொண்டு அழுவதற்காக அல்ல! ஆனால், காங்கிரஸ் அரசு ஆரம்பமான கால முதல், கண்ணீர் சிந்துவது அதிகமாகிறதேயொழிய களிப்புஅல்ல!! பணம் தேங்கியிருக்கும் இடத்திலிருந்து, வரிவசூலிக்கலாம். தேங்கிய இடங்கள், நாட்டில், ஏராளம்! ஆனால், வதங்கிய இடங்களென்றால்தான் ஆசையும் அலட்சியமும் அதிகமாகிறது!! அதனாலேயே, இந்த 'அடிமை'களும், அந்த 'ஆதிபத்தியமும்,' ஏழைகள் தலையில், கை, வைத்திருக்கின்றன.

இப்படி, 'உறுஞ்சி'க்கொண்டு செல்லும் வரிகள், ஒழுங்காகச் செலவிடப்படுகிறதா என்றால், அதுவும் கிடையாது! மாதா மாதம் வெளிவரும், ஊழல் பட்டியல், இதை விளக்கிக் கொண்டேயிருக்கிறது!! இந்த வகையில், முன்னேற்றம் கண்டு வருவது, டில்லிப் பீடம்தான். அது செய்துவரும் செலவுகளோ, கொஞ்சமல்ல! மக்களிடமிருந்துபோகும் வரியில், எவ்வளவு பணம் மக்களுடைய அடிப்படைத் தேவைகளைப்பூர்த்திசெய்ய,அது மீண்டும் திருப்பித் தருகிறதென்று பார்த்தால், ஏமாற்றமே, மிஞ்சும். ஏனென்றால், மக்களின் நன்மை தீமைகளில் நேரடியாகத் தொடர்புகொண்டது அல்ல, மத்ய அரசு. வெளி நாட்டு விவகாரம்—வியாபாரம்—படை திரட்டுதல் — புகழ் ஈட்டுதல் — இவைகளே, அதன் வேலைகளாக இருக்கின்றன. இதற்கு, இந்த உபகண்டத்திலுள்ள முப்பது கோடி மக்களிடமிருந்தும், எவ்வெவ்விதமாகவோ வரிசென்று கொண்டிருக்கிறது! அப்படிச் செல்கிற வரி இனங்களைப்பார்த்தால், வயிற்றெரிச்சலே, அதிகமாகும்!! ஏனெனில், சுலபமாகக் கிடைக்கக்கூடிய வரிகள், அவை. பாமரனையும், ஏழையையும் நேரிடையாகப் பாதிக்காத வரிகள், அவை.

அப்படிப்பட்ட 'சுலபமான' வரி வருவாய்களை, மத்ய பீடத்துக்கு, அளித்துவிடும் மாகாணங்கள், தங்கள் செலவினங்களைச் சமாளிப்பதற்கு, நேரடியாக மக்களின் தலையிலேயே கைவைக்கின்றனர்! இந்த வகையில், இந்த ஆண்டு, சென்னை அரசு ஏழை விவசாயிகள்மீது புதிய வரிகளைப் போட்டிருக்கிறது. நான் என்ன, சளைத்தவனா?—என்று, சுலபமாகக் கிடைக்கும் வருமான வரி, கலால் வரி ஆகியவைகள் போதாதென்று சர்க்கரைக்கும் வரியை உயர்த்தியிருக்கிறது, டில்லி பீடம். இப்படி இரண்டு 'எஜமானர்'களும் போட்டி போட்டுக் கொண்டு, நமது 'பை'யைத்தடவுகின்றனர். இந்த 'அழகைப்' பார்க்கும் போதுதான், இவர்கள் தெரிந்து செய்கிறார்களா, தெரியாமல் செய்கிறார்களா என்கிற சந்தேகம் வருகிறது. தெரியாமல் செய்ய, இவர்கள் தெருவீதியில் நிற்கும் தெந்தினா பாடிகளல்ல! ஆள்வோர்!! ஆகவே, தெரிந்தும், இந்தக் கொடுமைகளைச் செய்கின்றனர், என்கிற முடிவுக்கு வரவேண்டியவர்களாக இருக்கிறோம்.

இப்படித் தெரிந்து பிழை செய்வதில், டில்லியைவிட, இங்குள்ளோரையே அதிகம் பழிகூற விரும்புகிறோம்! ஏனெனில், ஏராளமான வரிப்பணத்தை இங்கிருந்து, சுரண்டிக் கொண்டு போகும் டில்லி, தென்னாட்டின் தேவைகளுக்கான பணத்தைச் செலவழிப்பதில்லை. இதனை, இப்போது கூட சட்ட சபையில், சாம்பசிவம் எனும் காங்கிரஸ் உறுப்பினரே எடுத்

துக்கூறி, குறிப்பிட்டிருக்கிருர். திருச்சி ராமசாமி எனும் காங்கிரஸ் உறுப்பினரும், ''இப்படி வரிகளைப் போடுவதற்குப் பதில், நாம் செலுத்தும் கலால் வரியிலிருந்தாவது, டில்லியிடமிருந்து பணம் வாங்க வேண்டும்'', என்று வலியுறுத்தியிருக்கிருர். இப்படி அவர்கள் கூடாரத்திலிருப்போரே வலியுறுத்திஞலும் கூட, 'ஆள்வோர்' அஞ்சுகின்றனர், டில்லியிடம்! கை கட்டி, வாய்பொத்தி, நமது வயிற்றிலடிக்கின்றனர்!! இவர்களுக்குப் பண்டித நேருவின் சலுகை தேவையாயிருக்கலாம்—கோபப்பார்வை கூடாது எனும் ஆசை இருக்கலாம்—அதற்காக நமது நாட்டுச் செல்வத்தை மார்வாடிகள் ஒரு பக்கம், ஆதிக்க அரசினர் இன்னெருபக்கமும் சுரண்டிக்கொள்ள விட்டு விட்டு, தமக்குப்பணம் வேண்டுமென்ருல், ஏழை மக்களான நமது வயிற்றில் அடிக்கும், இந்த அக்கிரமத்தை, ஒரு போதும் நம்மால் மன்னிக்க முடியாது.

ஒரு வட நாட்டுக் கவர்னர், இங்கே—அந்த நபருக்காக ஆண்டு தோறும் பத்துலட்ச ரூபாய்! மேல் சபை, என்ற பெயரால் ஒரு சபை—அதற்கு, வரிப் பணம்! பார்லிமெண்டு என்று ஒரு சபை—அதற்குப்போய் வரவும், அந்த சபைக்கு வேறு கட்டணம்! இங்கே இருக்கிற அமைச்சர்களுக்குச்சம்பளம்! டில்லியிலிருக்கும் அமைச்சர்களுக்கும் சம்பளம்! மத்ய அரசாங்க அதிகாரிகளுக்குச் சம்பளம்! இங்கேயிருப்போருக்கும் சம்பளம்! இப்படி,

நான்கு சட்ட சபைகள்,

இரண்டு சர்க்கார்கள்

இருவித, அதிகாரிகள்.

ஆகியோருக்கு, வரிப்பணத்தை அள்ளிக்கொடுத்துவிட்டு, திண்டாடும் அழகு, அகில உலகத்திலும், கிடையாது இங்கு தவிர! இப்படிப்பட்ட வாழ்க்கையில் உழல்வது, வடவருக்கு வேண்டுமாஞல், சகஜமாயிருக்கலாம்; ஏனெனில், டில்லியால், வாழ்பவர்கள் அவர்கள். நாமோ, வாடுபவர்கள்; நமக்கேன், இப்படிப்பட்ட வாழ்க்கை?- இப்படி, நாமல்ல, அவதிப்படும், ஒவ்வொரு ஏழையும் கேட்காமலிருக்க மாட்டான்.

வடக்கிலிருக்கும் பல மாகாணங்களுக்கும் சென்னையைப்போல, வரவு செலவில்'துண்டு'விழுந்தது; உடனே, அவை நமது வீரர்களைப்போல, ''விவசாயியே, போடுகாசை!'', என்று புறப்படவில்லை. டில்லியைக்கேட்டு வாங்கிக் கொள்ளலாம் — எப்படியாவது 'துண்டை'சமாளித்துக் கொள்ளலாம், என்று இருந்துவிட்டார்கள். ஆனல், 'ஆவடி' நடத்திய நமது அருமையாளர்கள், அப்படியிருப்பார்களா! அதஞல், ''நேருத் தலைவரே! எங்கள் புத்தியாருக்குவரும்? அவர்களைப் போல, உங்களுக்குத் தொல்லை கொடுப்பவர்களோ, நாங்கள்! பாருங்கள்—எங்கள், 'பட்டினி'களை நோக்கி படையெடுத்துவிட்டோம். ஈகையிற் சிறந்தவனன்ருே, எம் தமிழன்!'' என்று புறப்பட்டு விட்டார்கள்.

இந்தப் பொறுப்பற்ற போக்கை யார் பொறுத்துக்கொள்வது?

வாடும் விவசாயி, கண்முன் கிடக்கிருன், வாதையுடன்; தெரிந்தும் வருவதா, வரி கேட்க.

இப்படி 'இரண்டு ராஜா'க்களுக்கிடையே வாழத்தானு இந்நாட்டு மக்கள் பிறந்தார்கள்.

இப்படி வளங்களையும் வருமான வழிகளையும் கொட்டிக் கொடுத்துவிட்டு, 'தாலியைக் கொடு, நகையைப் போடு' என்று கேட்டுக்கொண்டு நாட்டில் உலவும் இவர்தம் போக்கை நல்லோர், நிச்சயமாக மன்னிக்கமாட்டார்கள்.

வாழ்க்கையென்ன உழைத்து உழைத்து, இவர்களுக்கு வரி செலுத்தத்தானு?

ஏனிந்த அக்கிரமம்? அகில உலக நிபுணர்களிலிருந்து சாதாரணமானவர்கள்வரை ஏழை விவசாயியின் நிலையைப்பற்றி ஏக்கமும் துக்கமும் கலக்கப் பேசுகிருர்கள்.

அது யாவும் அறிந்திருந்தும், அவர்களுக்கு அதிக வரி போட முனைந்த ஆட்சியின் போக்கை நிச்சயம் மன்னியாது, நாடு.

அவர்கள் செய்திருக்கும்,எட்டாவது வரை இலவசக் கல்வி எனும் நன்மை கூட, கண்முன் தெரியாது. ஏனெனில், நொந்து போனவன், வாழ்ச் சிறிது அவகாசம் கிடைக்குமா என்று ஏங்குகிருன். வரி மேல் வரியும், பொருள்களின் விலை உயர்வும், இவைகளை எப்படிச் சமாளிப்பது என்கிற ஏக்கமுமே அவன் நித்ய வாழ்வாகி விட்டால், பிறகு, வாழ்க்கை என்கிற வசீகரச் சொல் எதற்காக? அதிலும், இப்போது, நெல்போன்ற தானியங்களின் விலைகள் வேறு சரிந்து வருகின்றன. இப்படிப்பட்ட சமயத்தில், புதுவரிகள் போடும், 'இரு எஜமானர்' களையும், நாடு நிச்சயம் மன்னிக்காது.

★

# அந்த 'வரப்பிரசாதம்!'

வைகுண்டத்துக்குக் கிடைக்கப் போகிறது, 'அந்த வரப்பிரசாதம்'.

அனந்தசயனன் ஆனந்த நித்திரை புரியும், வைகுண்டம் அல்ல; நெல்லை மாவட்டத்திலுள்ள ஸ்ரீ வைகுண்டம் தாலுக்காவுக்கு, காமராஜ் அரசு அளிக்கவிருக்கும் 'வரப்பிரசாதம்' அது.

மணக்கரை என்னும் சிற்றூரிலிருக்கும் 700 ஏக்கர் நிலங்களை கூட்டுறவுப் பண்ணையாக மாற்றப்போகிறதாம்.

'சோஷியலிச மாதிரி'யில் ஏதாவது செய்துகாட்டவேண்டாமா? அந்த அவசரமோ அல்லது ஆசையோ தெரியவில்லை, விரைவில் கூட்டுறவுப் பண்ணை ஏற்படப்போகிறதாம்.

இதற்கென ரூ. 60,000 செலவில் நீர்ப்பாசன வசதிகள் செய்யப்படுமாம்—எரு, விதைகள், ஏர் முதலிய செலவுகளுக்காக ரூ. 30,000, செலவிடவும் யோசனையாம். வரிப் பணத்தில் தான் இந்தச் செலவுகள்.

தனிப்பட்ட மிராசுதார்கள் வசமிருக்கும் இந்த 600 ஏகர் நிலத்தையும், சர்க்கார் இருபது ஆண்டு குத்தகைக்கு எடுத்துக்கொள்ளுமாம். அதற்கென இருபத்தைந்து குத்தகைதாரர்களும் இருப்பார்களாம். அவர்களை கூட்டுறவுப் பண்ணையின் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளுமாம். அவர்கள்தான் அந்த நிலத்தைச் சாகுபடி செய்வார்கள். அப்படிச் சாகுபடி செய்யும்போது, அவர்களுக்கான கூலியை கூட்டுறவுப்பண்ணை கொடுத்துவிடுமாம். ஏரிட்டு பயிர் வளர்த்து, அறுவடையானதும்,விளைச்சலைக் கூட்டுறவுப் பண்ணையினர் எடுத்துக்கொள்வார்களாம். எடுத்துக் கொண்டு உறுப்பினர்களுக்கு, அதனைப் பங்கிட்டுக் கொடுக்கும் என்று எண்ணுவீர்கள். அல்ல, அல்ல. மிகுதியான நெல்லில் ஒரு பகுதியை சொந்தக் காரர்களுக்கு குத்தகையாக அளந்துவிடுமாம்-

*

''என்ன பிரதர்! ஏதோயிருக்கிற

பணத்தை நிலத்திலே போட்டா, வருஷா வருஷம் அதிலேருந்து வர்றதை வைச்சுகிட்டு, காலத்தை 'ஹாயா' கழிக்கலாம்னு நினைச்சு, நிலத்தை வாங்கிப்போட்டா, என்னென்ன சங்கடம் என்று சொல்றேள். குத்தகைக்காரன், கேட்கிற குத்தகையை கொடுக்கமாட்டேங்கிறான்; நாமே, நேரில்போய் சாகுபடி செய்யலாம்னாலோ, விவசாயிங்க தொல்லை வேறே! ஒரே, கவலையாப் போச்சு."

*

இப்படி, சஞ்சலப்படும், நிலப்பிரபுக்கள் ஏராளமுண்டு! பட்டணங்களிலும், பங்களாக்களிலும் வாழ்வோர், இப்படி சலித்துக்கொள்ளும் காட்சிகளைக் காண்கிறோம், எங்கும்.

நிலத்தில் உழைப்பவன், தன்னுடைய உழைப்பின் பெரும்பாகத்தை தானே அனுபவிக்கவேண்டும் என்கிற ஆசை அதிகமாகி வருகிறது. உழைப்பவனுக்கே, உரிமை!–என்கிற முழக்கம் எழாத இடமில்லை, இப்போது.

விழிகளில் புது ஒளியுடன், விவசாயி பேசுகிறான் இன்று!" "உழைக்க, நாங்கள், கொட்டிக்கொண்டு போக அவர்களா?", என்பதாக. இந்த உணர்ச்சி அலைகள் அதிகமாகி வருகிற காரணத்தால், நிலப்பிரபுத்துவத்துக்கு சாவு மணியடிக்கவேண்டும், குவிந்துகிடக்கும் நிலங்கள்யாவும் பகிர்ந்து அளிக்கப்படவேண்டும் என்னும் உரிமைக் குரல் ஒலிக்கிறது, எங்கும்.

அண்மையில் காங்கிரஸ் கட்சியினர் நியமித்த நிலச்சீர்திருத்த கமிட்டிகூட, "ஒவ்வொருவர் வசம் இவ்வளவு நிலம்தானிருக்க வேண்டும் என்பதை வரையறுக்க வேண்டும்," என்று வெளியிட்டிருக்கிறது.

இந்த நிலைமையில், மணக்கரையில், கூட்டுறவுப் பண்ணை அமைக்கப் போகிறார்களாம்!

*

கூட்டுறவுப் பண்ணை!–மிகவும், வரவேற்கக்கூடிய ஒன்று.

நாட்டின் நஞ்செய் புஞ்செய்கள் யாவும், கூட்டுறவுப் பண்ணைகள்மூலம் சாகுபடிச் செய்யவேண்டும் என்பதே சமதர்மக் கொள்கையும்கூட.

ரஷ்யாவில், விவசாயம் அப்படித்தான் நடைபெறுகிறது.

சின்னஞ் சிறிதாகச் சிதைந்துகிடக்கும் கழனிகளையெல்லாம், பண்ணைகளாக்கி, அவைகளுக்கு வேண்டிய எரு, உரம், முதலியவைகளைக் கொடுத்து அவைகளை பயிரிட்டால், பலனும் பயனும் அதிகம்பெற முடியும். அதோடு. தனிச் சொத்துரிமை, தன்னுடையதெனச் சொல்லும் அகங்காரம் ஆகியவைகளுக்கு சாவுமணியடிக்கப்பட்டு, நிலம்யாவும் உழைப்போருக்கே சொந்தம் என்கிற உன்னத லட்சியமும் நிறைவேறக்கூடும்.

அந்தக் கூட்டுபண்ணையல்ல காங்கிரஸ் அரசு, நிறுவ விரும்புவது! ஏதோ ஓரிடத்தில்—ஏதோ ஒரு 'மாடலில்'—இப்படியொரு கூட்டுப்பண்ணை.

சர்க்கார், குத்தகைதாரர்களாக, மாறுகிறது! அதற்காக ஒரு கூட்டுறவுப் பண்ணையை, அமைத்து, அதில் பலரை வேலைக்கமர்த்தி, கூலியும் கொடுத்து, கண்டு முதலையும் செய்து, நிலக்காரனுக்குச் சேரவேண்டியதையும் சரியாகச் சேர்க்கப்போகிறது!

கழனியில் புயலையும். குத்தகைக்காரர்கள் குமுறலையும் சமாளிக்க வேண்டிய சங்கடத்திலிருக்கும் பட்டணத்துப் பிரபுவுக்கு; இந்த ஏற்பாடு, கசக்கவா செய்யும்? இதுவரை கந்தனும் கருப்பனும் கழுத்தறுத்தார்கள்—இனிக் கவலையில்லை—சர்க்காரே, ஒழுங்காக நமக்கு நெல்லை அளித்துவிடும் என்ற ஆனந்தம்தானே, அடைவர்.

இதற்கா, இந்தக் கூட்டுறவுப் பண்ணை முறை பயன்பட வேண்டும்? நிம்மதியாக இருபது ஆண்டுகளுக்கு!! இம்மாதிரி, அவர்களுக்கு, 'உறுதி மொழி' தருகிறது, அரசு!

இன்றோ, நாளையோ என்று ஏங்கிக் கொண்டிருக்கும் நிலப்பிரபுக்களுக்கு, 'இருபது ஆண்டுகளுக்கு உங்களுக்குக் கவலையில்லை' என்கிற உத்திரவாதத்தையும், இந்தக் கூட்டுறவுப் பண்ணை மூலம், அளிக்கிறது.

இப்படி ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலங்களை, "இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, கூட்டுறவுப் பண்ணை, நஷ்ட ஈடு எதுவும் கொடுக்காமல்", எடுத்துக் கொள்ளுமாம்.

இருபது வருடங்கள்! அதற்குப் பிறகு!

ஆனால், நஷ்ட ஈடில்லாமல், கூட்டுப் பண்ணை, எடுத்துக் கொள்ளுமாம், இதைப் பார்க்கும்போது, "நஷ்டஈடு இல்லாமல்", என்கிற அம்சம், முற்போக்காளரைத் திருப்திப்படுத்தும் வாசகம்போல் காட்சி அளிக்கும்.

ஆனால், இந்த இருபது ஆண்டுகளுக்கு—உழைப்பவன், தினசரி கூலி வாங்கிக் கொண்டு, உழைத்துக் கொண்டேயிருக்கவேண்டும். மறக்க வேண்டாம்!

சோஷியலிசமாடலுக்கு ஒரு உதாரணம் இச்செயல்! பிரபுக்களின் கொட்டத்தை அடக்குகின்றார்களாம், அகிம்சா வழியில்!! நடுத்தெரு நாராயணனுக்கு, வாழ்வு வழங்கும் வழியாம் இது.

பயத்தோடு கிடக்கும் பணக்காரனுக்கு, இருபது ஆண்டுகளுக்குப் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. அதே நேரத்தில், "ஏ விவசாயி! அவசரப் படாதே. இருபது ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நிலம் உனக்குத்தான் சொந்தம்" என்றும் ஆசை காட்டப்படுகிறது.

வெளியில் அழகு, உள்ளே நஞ்சு—ஏனிந்தக் குறுமதிகள் தோன்றவேண்டும் அரசுக்கு. பாதை நேராக இருக்கும்போது பணக்காரர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக ஏன் இப்படிப் பட்ட காரியங்களில் ஈடுபடவேண்டும்? இதற்குப் பெயர் கூட்டுறவுப் பண்ணையாம்! ஆறு நூறு ஏக்கருக்கு 25 பேர், உழைக்க வேண்டுமாம். நல்ல வேடிக்கை! நல்ல திட்டம்!!

★

## அன்பழைப்பு

அன்புடையீர்,

வரும் 10—3—55 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு எனக்கும் தோழியர் பார்வதிக்கும் (நடிகைத் தோழியர் டி. பி. முத்துலட்சுமி அவர்கள் மாமன் மகள்) சென்னை, ராயப்பேட்டை, லாயிட்ஸ் ரோடு 155 எண்ணுள்ள இல்லத்தில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் தலைமையில், அண்ணா அவர்கள் வாழ்த்துரை வழங்க நடைபெறும் கலப்புத் திருமண விழாவுக்கும், மாலை நடைபெறும் தோழியர் டி. வி. ரத்னம் அவர்களின் இன்னிசைக்கும் வருகைதர வேண்டுகிறேன்.

தங்கள்,

**எம். என். கிருஷ்ணன்.**

# பௌத்த ராமாயணம்

கௌதம புத்தர் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் விளங்கினார். அவர் காலத்தோ, அதற்குச் சிறிது பின்போ, புத்தரின் பழம் பிறப்புகளைக் கூறும் சாதகக் கதைகள் எழுந்தன. அக்கதைகளுள் ஒன்றாகிய **தசரத சாதகத்தில்** இராம கதை பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

"முன்னொரு காலத்திலே வாரணவாசியில் தசரதன் என்னும் அரசன் வாழ்ந்தான். அவனுக்கு அறுபதினாயிரம் மனைவியர் இருந்தனர். அவர்களுள் பட்டத்துத்தேவி இரு குமாரரையும், ஒரு குமாரத்தியையும் பெற்றாள். மூத்த குமாரன் இராமன், இரண்டாம் குமாரன் இலக்குமணன்; புதல்வி சீதை. பின்பு அரசி இறந்துபோனாள். அவள் இறந்துபோதலும் அரசன் இன்னொருத்தியை மணந்தான். அவன் அவளிடத்தில் மிக மயங்கியிருந்தான். அவள் வயிற்றில் ஒரு மகன் பிறந்தான். அவனுக்குப் பரதன் என்று பெயர். மகன்மீது கொண்ட பற்றினால் அரசன் பட்டத்துத்தேவியை ஒரு வரம் கேட்கும்படி சொன்னான். அவள் தான் வேண்டும்போது வரத்தைக் கேட்டுக்கொள்வதாகச் சொன்னாள். பரதனுக்கு எட்டு வயதாயிற்று. அப்பொழுது அவள் அரசனிடம் சென்றாள்; முன் கொடுப்பதாகச் சொன்ன வரத்தின்படி இராச்சியத்தை மகனுக்குக் கொடுக்கும்படி கேட்டாள்.

அரசன் கையை உதறி, "நாயே! எனது அழகிய இரண்டு மக்களையும் கொன்றுவிட்டு இராச்சியத்தை உனது மகனுக்குக்கொடுக்கும்படி கேட்கிறாயா?" என்றான். அவள் அரசனின் கோபமான சொற்களைக் கேட்டுப் பேசாது அறையினுள் சென்றாள். அவள் தினமும் அரசனை அடைந்து நாட்டை மகனுக்குக் கொடுக்கும்படி கேட்டுவந்தாள்.

அவன், "பெண்கள் தீயவர்கள், இவள் பொய்யான கடிதம் எழுதி அல்லது எவருக்காவது கைக்கூலி கொடுத்து எனது புதல்வரைக் கொன்றுவிடுவாள்" என்று தனக்குள்ளே நினைத்தான். அவன் தனது இரு புதல்வரையும் அழைத்து, "நீங்கள் இங்கிருந்தால் உங்களுக்குப் பல துன்பங்கள் நேரும். நீங்கள் அடுத்த இராச்சியத்துக்கு அல்லது காட்டிற்குச் செல்லுங்கள்; எனது மரணகிரியை நடக்கும்போது வந்து எனது ராச்சியத்தை கைப்பற்றிக்கொள்ளுங்கள் என்று சொன்னான். அவன் சோதிடரை அழைத்தான்; தனக்கு இன்னும் எவ்வளவுகால வாழ்நாள் இருக்கிறதென்று பார்க்கும்படி கேட்டான். அவர்கள் இன்னும் பன்னிரண்டு ஆண்டுகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். பன்னிரண்டு ஆண்டுகள் கழித்து வரும்படி அரசன் தனது இரு புதல்வருக்கும் சொன்னான். சீதையும் தன் சகோதரர்களுடன் செல்வேன் எனச் சென்றாள். அவர்கள் ஹமவந்தா என்னும் காட்டை அடைந்து வாழ்ந்துவந்தார்கள். மக்களைப் பிரிந்த கவலையினால் தசரதன் ஒன்பதாவது ஆண்டு மரணமானான்.

ஈமக்கிரியை முடிந்தது. "எனது குமாரனுக்கு முடிசூட்டுங்கள்" என்று அரசி மந்திரியாரிடம் சொன்னாள். அவர்கள் அதற்கு இணங்கவில்லை. பரதன் இராமனைக் காட்டினின்றும் அழைத்து வருவதாகச் சொல்லி நால்வகைச் சேனைகளோடும் புறப்பட்டான். அவன் சேனையை தூரத்தில் நிறுத்திவிட்டுச் சென்று தந்தையின் மரணத்தைக் கூறினான். இராமன் கவலைகொள்ளவில்லை. மற்ற இருவரும் மயக்கமடைந்தனர். பரதன் இராமனை நோக்கி "நீர் அழாமல் இருப்பதற்குக் காரணம் என்ன" என்று கேட்டான். மனிதனால் ஆகாத ஒன்றிற்காகப் புலம்புவதால் பயனில்லை. பழுத்த பழம் எப்பொழுதாவது நிலத்தில் விழுந்துவிடும். பிறந்தவர்கள் எல்லோரும் ஒருநாளைக்கு இறந்து விடுவர்" என்று இராமன் சொன்னான். இதைக்கேட்டு மற்றவர்கள் ஆறுதலடைந்தார்கள். பரதன் வணங்கி வாரணவாசியை ஆளும்படி இராமனைக் கேட்டான். "இலக்குமணனையும் சீதையையும் அழைத்துச் சென்று நீயே ஆட்சி செய். எனது தந்தை பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்து வரும்படி கட்டளையிட்டார். இப்பொழுது வந்தால் நான் தந்தையின் கட்டளையைக் கடந்தவனாவேன். நான் இன்னும் மூன்று ஆண்டுகளின் பின் வருவேன்" என்றான்.

"அவ்வளவு காலமும் யார் ஆட்சி புரிவார்" என்று பரதன்கேட்டான். இராமன் "எனது மிரிதடிகள் ஆட்சி புரியும்" என்று சொல்லித் தனது புல்லால் முடைந்த மிரிதடிகளை அவனிடம் கொடுத்தான். மூவரும் மிரிதடிகளை எடுத்துக் கொண்டு வாரணவாசி சென்றார்கள். மந்திரிமார் சிங்காசனத்தின் மீது மிரிதடிகளை வைத்து ஆட்சி புரிந்தார்கள். ஆகாதயோசனைகளை அவர்கள் செய்ய நேர்ந்தால் மிரிதடிகள் ஒன்றை ஒன்று முட்டிக் கொண்டன. மூன்று ஆண்டுகள் கழிந்தன. இராமன் காட்டினின்றும் வந்தான். அவன் பதினாறாயிரம் ஆண்டுகள் நீதி ஆட்சிபுரிந்து வானுலகடைந்தான்.

[இவ்வரலாற்றில், இராவணன் சீதையைக் கவர்ந்ததைப்பற்றியோ, இராம இராவணப் போர்களைப்பற்றியோ யாதும் கூறப்படவில்லை]

[பகுத்தறிவு]

★

## இங்கு

சென்னை அரசினர், இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை தமிழில் அச்சடித்துக் கொடுத்தனராம். இதுபற்றி, சர்க்காரைப் பலரும், பாராட்டியிருக்கின்றனர்.

## அங்கு

டில்லி பார்லிமெண்டிலும், முதல் தடவையாக, வரவு செலவுத் திட்டத்தை 'இந்தி'யில் அச்சடித்து எல்லோருக்கும், கொடுத்தனராம்.

## ஆனால்

சென்னை நிதி அமைச்சர் சுப்ரமணியம், தமிழில் வரவு செலவைத் தயாரிப்பது, மிகச் சிரமமாகயிருந்ததென்றோ, வார்த்தைகளுக்காக வேட்டையாட நேரிட்டதாகவோ தெரிவிக்கவில்லை! 'இந்தி'யில் இந்த உபகண்டத்தின் வரவு செலவைச் சமர்ப்பித்த டில்லி தேஷ்முக் தெரிவித்தாராம், "உறுப்பினர்களே! பல ஆங்கில வார்த்தைகளுக்குச் சரியான, 'இந்தி' வாசகங்கள் இல்லாததால், எதையெதையோ சேர்த்திருக்கிறோம். அதைப் பொறுத்துக்கொள்ளுங்கள்!"

[தொடர் சித்திரம்]

# கடிகாரம்

15

[அண்ணல்]:

"அயோக்கியர்களும், ஆஷாடபூதிகளும், வாழ்க்கையின் வழிகளிலெல்லாம் நிறைந்து கிடக்கிறார்களே! தெய்வக்கூடம், சிங்காரமடம். அங்கே, அயோக்யன் ஜயமணி. குருவுக்கு அருகில், அவன் இருக்கும்போது, கும்பிடுவோர் அவன் காலிலும் விழுந்து, எழுந்திருக்காமலில்லை! ஈசன்—என்னப்பன்—எப்படிச் சகித்துக்கொண்டிருக்கிறார், இவனை? தீராத வியாதியெல்லாம் தீர்த்துவைக்கும்—மலடியின் வயிற்றில் 'மலர்' போலக் குழந்தை கிடைக்கச்செய்யும் — விபூதியைப் பூசிக்கொண்டாலே, விரும்பிய காரியம் — முடியும், என்று, சிங்கார மடத்துக்கிருக்கும் கியாதி பெரிது! அதனால், ஒவ்வொரு வியாழக்கிழமையும், ஊரே திரண்டிருக்கும் மடத்தில். வெளியூரிலிருந்துகூட, வருவார்கள், மக்கள்! அப்படிப்பட்ட 'சக்தி' மிக்க இடத்தில், இந்தச் சண்டாளன்! நாச்சியின் நம்பிக்கைகளைத் தூசாக்கிய துரோகி! மக்களின் உணர்ச்சியை வலையாக்கி, பணவேட்டையாடிய பாதகன், செல்வாக்கால், சிறையையும் மிதிக்காத சிறு நரி!—அவனுக்கு, சிங்கார மடத்திலே, வாசம். அவன் காலிலும், மக்கள் விழுந்து கும்பிடுகிறார்கள்? அவன் கூறுகிறான், "நாளைக் காலையில்! நடு ஆற்றில்!!," என்று. என் சிந்தை, அந்த வார்த்தைகளையே, வட்டமிட்டது. இந்த அயோக்கியனைப்பற்றி, 'ஜகத்குரு'விடம் தெரிவித்துவிடுவோமா, என்றும் எண்ணினேன்! எனக்கு 'ஜகத்குரு'மீது அபார நம்பிக்கையுண்டு—சிங்கார மடத்திலிருக்கும் தெய்விக ஜோதியென்றே எல்லோரைப் போலவும் கருதியவன், நான்—அவரருகில், இந்த அரவமா? நாளைக் காலையில் நடு ஆற்றில் வந்து பார்ப்போம்! பிறகு, அவரிடம், இவன் அட்டகாசங்களையெல்லாம் சொல்லுவோம் என்று எண்ணிக்கொண்டு, வீட்டுக்கு வந்தேன். "நாச்சியிடம் இந்த விபரங்களைச் சொல்லலாமா? கூடாதா?", "இப்போது சொல்வதற்குப் பதில், எல்லாக் காரியங்களையும் முடித்துவிட்டு, ஜெயமணியை மடத்திலிருந்து விரட்டிவிட்டேன்!, என்கிற வெற்றிச் செய்தியைத் திடீரென்று தெரிவித்தால், அவளுக்கு எவ்வளவு ஆனந்தம் ஏற்படும்?", 'சரி, அப்படியே செய்யவேண்டும். இப்போது, அவளிடம் எதுவும் தெரிவிக்கக்கூடாது", என்று முடிவு செய்தேன். அவளது கதைகளைக் கேட்டதுமுதல், அவளிடம் எனக்கொரு அலாதியான மதிப்பும், அன்பும் அதிகமாயிற்று. வீட்டில், என்னை எதிர்நோக்கிக்கொண்டிருந்தாள்—இருவரும் சாப்பிட்டோம்—படுத்தோம்—சிங்கார மடத்துக்குப் போனதாகச் சிறிதுகூடக் காட்டிக்கொள்ளவில்லை நான். நாச்சி தூங்கிவிட்டாள்—எனக்கோ, "நாளைக் காலையில்! நடு ஆற்றில்!", என்ற வார்த்தைகளே ஞாபகத்துக்கு வந்தது. அதைப்பற்றி எண்ணியபடியே, கிடந்தேன். ரயில்வே ஸ்டேஷனில் மணி அடிக்கும் சப்தம் கேட்டது—திருவாரூரிலிருந்து தஞ்சாவூருக்கு விடியற்காலை 4 மணிக்கு ஒரு ரயில் போகும்—அதற்காகத்தான் மணியடித்தனர். எழுந்து உட்கார்ந்தேன்! நாச்சியைப் பார்த்தேன் — நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தாள்! விழித்துக்கொள்ளாதபடி, மெதுவாகக் கிளம்பி, வேகவேகமாகப் புறப்பட்டு சிங்கார மடத்துக்கு அருகில் ஓடிக்கொண்டிருக்கும் ஓடம் போக்கி ஆற்றுக்கு வந்து சேர்ந்தேன். சிங்கார மடத்தில் மாட்டியிருக்கும் கடிகாரத்திலிருந்து மணி 5 அடிக்கும் சப்தம், காதில் விழுந்தது. ஆற்றங்கரையில் உட்கார்ந்தபடி மடத்தின் வாயிலையே பார்த்துக்கொண்டிருந்த எனக்கு, கடிகாரத்தின் மணி ஓசையைக் கேட்டதும், நாச்சியிடமிருக்கும் கடிகாரத்தின் நினைவு வந்தது. நாச்சி—ஜயமணி—நாளைக் காலையில்! நடு ஆற்றில்! என்ற வார்த்தைகள், மாறிமாறி என் மனதில் ஊசலாடிக்கொண்டிருந்தன.

அந்த நினைவிலேயிருந்த எனக்கு, சிங்காரமடத்தின் கதவு திறக்கப்படும் சப்தம் கேட்டது. மடத்தின் பின் பக்கத்துக் கதவைத் திறந்தால், தனியாக ஒரு படித்துறையுண்டு ஆற்றுக்கு வர! அதன் வழியாக, ஜகத்குரு வந்தார்—அவருடன், ஜெயமணியும், முதல் நாள் மடத்தில் நான் பார்த்த மற்றொரு சாமியும் வந்துகொண்டிருந்தனர். கிழக்கு வெளுத்துக்கொண்டிருந்தது! மங்கிய வெளிச்சம்! மக்கள் நடமாட்டம் இன்னும், துவங்கவில்லை! ஜகத்குரு, ஆற்றில் இறங்கி, நடு ஆற்றுக்கு வந்தார்—அரகர சம்போ மகாதேவா!—என்று கூவியவண்ணம், தண்ணீருக்குள் மூழ்கினார். அவருக்கு அருகிலே குளித்தவண்ணம், நின்றுகொண்டிருந்த ஜயமணி, திடீரென்று பாய்ந்தான்—அவன் கூடயிருந்த சாமியும் பாய்ந்தான்—'ஐயோ!' என்ற கூச்சல், 'அரகரசம்போமகாதேவா!' என்று கூவிய, குருநாதரின் வாயிலிருந்து புறப்பட்ட சப்தம் கேட்டது!

எப்படியிருக்கும் எனக்கு? இதுதானா இவர்களுடைய சதியின் முடிவு! கரையின் ஒரு பக்கத்தில் இதைக் கவனித்துக்கொண்டிருந்த நான், ஆற்றுக்குள் பாய்ந்தேன்—நான் குதித்த சப்தம் கேட்டதும் இருவரும் திரும்பிப் பார்த்தனர்—'ஜகத்குரு' பிணமாக ஆற்றில் மிதந்து போய்க்கொண்டிருந்தார். ஓடிப்போய் பிணத்தை இழுத்துக்கொண்டு "படுபாவிப்பயலே! என்ன காரியம் செய்துவிட்டாய்" என்று அலறினேன். இருவரும் விழித்தார்கள். வேகவேகமாக படித்துறையை நோக்கி ஓடினார்கள். ஓடும் ஆறு—தோளிலே 'ஜகத்குரு' பிணமாக—என்ன செய்யமுடியும் நான்?—எப்படி அந்தப் பாவிகளைப் பிடிக்கமுடியும் — கூச்சல் போட்டேன். மடத்திலிருந்தோர் என் கூச்சலைக் கேட்டு ஓடிவந்தனர். பிடியுங்கள் பிடியுங்கள்—என்று கூவினேன். ஜெயமணியும் சாமியுமோ படித்துறையில் நின்றபடி, 'ஐயோ ஐயோ' என்று அடித்துக்கொள்ளலாயினர்—'ஜகத்குரு'வின் பிணத்தையும் என்னையும் காட்டினர்—குளித்துக்கொண்டிருந்த குருநாதரைக் கொன்றுவிட்டேன் என்று குற்றம் சாட்டப்பட்டேன்—போலீஸ், கோர்ட்டு எல்லாம் தாண்டினேன் — ஓரிடத்திலாவது என் குரலுக்கு மதிப்பில்லை—என் படத்தைப் போட்டு பத்திரிகைகள் எல்லாம், 'பாவி! அக்கிரமக்காரன், ஜகத்குருவைக் கொன்ற

கொடியவன்' என்று எழுதியிருந்தார்கள். என் வார்த்தையை யாரும் நம்பவில்லை. ஜயமணியும் சாமியும்தான் இருக்கிறார்களே சாட்சிகள்.

கொலைக் குற்றம் சாட்டப்பட்டு, கூண்டில் நிறுத்தப்பட்டேன். நாச்சி ஓடிவந்தாள்; 'ஓ'எனக் கதறினாள். ஒவ்வொருவரிடமும் ஜயமணியைப்பற்றிச் சொன்னாள்; கடிகாரத்தைக் காண்பித்தாள். யார் நம்புவார்கள்? அடுத்த குருநாதராக யார் வருவார்கள் என்கிற ஆவல் அதிகமாக இருந்ததேதொழிய, ஊரார் யாரும் திண்டாடும எங்களிருவர்களைப்பற்றிக் கவலைப்படவில்லை. நான் தண்டிக்கப்பட்டேன் – நான் செய்த கொலையைக் கண்ணாரக் கண்ட சாட்சியங்கள் இருந்தாலும் 'ஏன் கொலை செய்தேன்?' என்பதற்கான காரணங்கள் இல்லாததால், தூக்கு தண்டனை விதிக்காமல், ஏழாண்டு சிறைவாசம்மட்டும் அளிப்பதாகக் கோர்ட்டில் தெரிவித்தார்கள்—நான் சிறைக்குள் இழுத்துச் செல்லப்பட்டேன். ஜயமணியோ, மடத்தின் அடுத்த 'ஜகத்குரு'வாக ஆக்கப்பட்டானாம்! அந்த விழாவுக்கு, எனக்கு 'நீதி' வழங்கிய நீதிபதியும், போகத் தவறவில்லை. பிறகு, என் நாச்சி, எக்கதியானாள் என்கிற விபரம் ஏதும் அறியேன். ஏழாண்டு சிறைவாசத்தில், ஆறு ஆண்டுகள் முடிந்ததும், என்னுடைய நன்னடத்தை முதலியவைகளைக் கருதிவிட்டுவிட்டார்கள்.

அதுமுதல், என் நாச்சியைத் தேடி அலைந்தவண்ணமேயிருந்தேன்! ஊரில், எந்த விபரமும் தெரியவில்லை. ஊரே, மாறிப்போய்க்கிடந்தது. 'என்ன ஆனாளோ' 'என் நாச்சி' என்று அலைந்தேன். என் நாவில், எப்போதும், அவள் பாடிய, "உண்மையில் கடவுள் உண்டோ, இல்லையோ?" என்கிற பாட்டு மட்டும், இருக்கலாயிற்று. சென்ற இடமெல்லாம், இதைப் பாடினேன்! தெய்வம் உண்டா — இல்லையா — என்பதைப்பற்றி, தீர்மானமான முடிவுக்கும் வந்தேன். ஈசன் என்று ஒருவன் இருப்பானேயானால், இப்படியா, எங்களைப் படாதபாடு படுத்துவான். புலி, வாழ்கிறது! புள்ளிமான் சாகிறது! — இதுவா ஈசன் திருவிளையாடல்? அதனால், பாடினேன்! பாட்டைக் கேட்டோர், என்னைப் பைத்தியக்காரனென்று விரட்டினர்—அடித்தனர்—வேதனைகளில் ஆழ்த்தினர். அதன் காரணமாக, ஒருமுறை, என்னை பைத்யக்கார ஆஸ்பத்திரியில் கூடக் கொண்டுபோய் விட்டனர்! அங்கேயும், சில காலம் இருந்தேன். அப்போது, ஜெயமணியுடன் இருந்து 'கொலை' செய்தாரே சாமியார், அவரையும் கூட, பைத்யக்கார ஆஸ்பத்திரியில் கண்டேன்.

ஜெயமணி, நான் சிறையில் பூட்டப்பட்ட சில மாதங்களுக்கெல்லாம், 'பைத்யம்' என்று பழி சூட்டி இங்கு கொண்டுவந்து தள்ளிவிட்டதாக என்னிடம் கூறி அழுதார், அந்தச்சாமி! இவர், எங்கே தனக்கு எதிரியாக வந்துவிடுவாரோ, என்கிற அச்சத்தில் செய்தானாம்' அழுதார், என்னிடம்.

'ஜயமணி'யைச் சகித்துக்கொண்டிருப்பதோடன்றி, போற்றிக்கொண்டிருக்கும் மக்களைப்பற்றி எண்ணினேன் நான். அக்கிரமக்காரன் வாழ்கிறான்! அவனை, போற்றித்துதிக்கின்றனர்,மக்கள்! ஆனால் எனக்கும், அவனுக்கும் "பைத்யக்காரப் பட்டம்" கிடைத்திருக்கிறது?

எப்படிப்பட்ட உலகம் பார்த்தீர்களா? என் ஆசைக்குரிய நாச்சியைத்தேடி, சாகுமுன், ஒரு தடவையாவது சந்திக்க வேண்டும் என்று அலைந்தேன். கடிகாரத்தைக் கண்டதும், நம்பிக்கைப் பெற்றேன். 'என்னுடையது' என்று வரதன் கூறியதும், விபரம் அறியத் துடித்தேன், விளைவுதான் குழப்பம்! இந்தக் கோளாறு எல்லாம்!" என்று கூறி முடித்தான், நல்லான்.

என் கண்களிலும் அவனைப் போல, நீர் துளித்தது.

"நல்லான்! அப்படியென்றால், உன்னுடைய நாச்சியா. கடிகார வழக்கில் சிக்கியிருக்கும் வள்ளி?"

"ஆமாங்க! அவ தான்! நல்லவள் என்று நம்பிய, அவள் தான். நானில்லை என்று தெரிந்ததும், அந்த வரதனைத் தேடிக்கொண்டாள் போலிருக்கிறது. இந்த மனசிலே, ஒட்டிக்கொண்டிருந்த உயிர், இருந்து இனிமேலே யாருக்கு என்னங்க பிரயோசனம்? நான் வர்றேன்!", என்று சொல்லிவிட்டு, என்னிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு, புறப்படலானான், நல்லான்.

அவன் கதையைக் கேட்டபிறகு, அவனை வெளியேபோகச் சொல்ல எனக்கு மனமில்லை.

மிகவும் வலியுறுத்தி அவனை இருக்கச்சொல்லிவிட்டு, கடைக்குப் புறப்பட்டேன்.

## 'முடிச்சு' வேலை!

புரட்சிக்குமுன்! பிரான்ஸ் நாட்டு மக்கள், குருக்கள்மார்களாலும், கொடுங்கோலர்களாலும் அனுபவித்த கொடுமைகள் ஏராளம். இவர்களுடைய ஏவலில் கிடந்த அதிகாரிகள்கூட, அக்கிரமங்கள் செய்யத் தயங்கவில்லையாம். இந்தக் கொடுமைகளின் காரணமாகவே 1789ல் பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட்டது. அக்கிரமத்துக்கு ஆளானோரால், தாங்க முடியாத நிலையில், இரகசியமாக பாரிஸ் நகரிலும்,பிரான்ஸ் நாட்டின் கோட்டங்களிலும் புரட்சி இயக்கங்கள் தோன்றின. அப்போது, அந்த இயக்கத்துடன் தொடர்புகொண்டிருந்த பெண்களால், கொடுமைசெய்த பாதிரி, பணக்காரன், அவர்கள் பெயர், முகவரி, காலம் விவரம், கொடுமைப் பட்டியல் யாவும், நம்பர் கொடுக்கப்பட்டு, பின்னல் ரிஜிஸ்தர்களில், முடிந்துவைக்கப்பட்டன. பாரிஸ் நகரப் பெண்கள் போட்ட 'முடிச்சு'களை அவிழ்க்கவும், அறியவும், புரட்சி இயக்கத்தாருக்கு மட்டுமே தெரியுமாம். மற்றவர்களுக்கு அவை அலங்காரப் பின்னல்கள் போலவே, காட்சி தருமாம்! புரட்சி மூண்டு, முடியரசுசாய்ந்து, குடியரசு ஏற்பட்டதும், அந்த பின்னல்முடிச்சுகள் யாவும், மக்கள் மன்றத்தின் குற்றப் பத்திரிகைகளாய் விளங்கி அந்த'முடிச்சு'களில், குறிக்கப்பட்ட முடிகள்யாவும் தூக்குமேடையில் உருண்டனவாம்! அக்கிரமக்காரர்கள் யாவரும் பழிவாங்கப்பட்டனராம்!! இங்கு, நமது கிராமங்களில், கூறப்படுவதுண்டு, "நினைவுக்குவரவில்லையென்றால், வேட்டியில் முடிச்சுப்போட்டுக் கொண்டுபோ. மறந்து விட்டால்கூட, முடிச்சைக் கண்டதும், ஞாபகம் வரலாம்", என்பதாக. இதுபோலத்தான், பிரெஞ்சு நாட்டினரும், முடிச்சுகள் போட்டனர்! முடிகளைச் சாய்த்து முத்தாப்பும் வைத்தனர், அக்கிரமங்களுக்கு!!

★

போகும் வழியில், மாஜிஸ்திரேட் மருதவாணர் என்ன நிலையிலிருக்கிறார் என்று தெரிந்துகொள்ளலாம் என்கிற எண்ணத்துடன் அவர் வீட்டுப் பக்கமாகப் போனேன். வேலைக்காரனைப் பார்த்தேன்; அவர் உடம்பு, இப்போது ஓரளவு தேவலாமென்றும், உத்யோகத்தைவிட்டு விலக விரும்புவதாக அவர் சர்க்காருக்கு எழுதியிருப்பதாகவும் இரண்டொரு நாளில் புதிய மாஜிஸ்திரேட் வரப்போவதாகவும் கூறினான்.

கடைசியில், ஹெட்கான்ஸ்டேபிளைப் பார்த்தேன். "சிங்காரமடத்திலிருந்து எல்லா விபரங்களையும் தெரிந்துகொண்டு சப்-இன்ஸ்பெக்டர் வந்துவிட்டார். திருட்டுப் போனது, மடத்துக் கடிகாரம் தானும்! புதிய மாஜிஸ்திரேட் வந்ததும் இந்த வழக்குத்தான், விசாரணைக்கு வரப்போகிறது," என்று சொன்னான்.

"ஜகத்குருவையும் சாட்சியாகப் போட்டிருக்கிறீர்களோ?", எனறு கேட்டேன், நான். ஜகத்குருவாகயிருக்கும் ஜயமணியையும், நாச்சியையும் ஒரே இடத்தில் சந்திக்கச் செய்யவேண்டும் என்கிற ஆசையுடன்.

"அது எப்படிங்க முடியும்? அவர், எவ்வளவு பெரிய குரு! அவரை எப்படிங்க, கோர்ட்டுக்கு வரச் சொல்ல முடியும்?"—என்று கூறினான், ஹெட்கான்ஸ்டேபிள், மாணிக்கம்.

"மாணிக்கம்! எப்படியாவது, அதற்கு ஏற்பாடு, செய். உனக்கு நான் சமயாசந்தர்ப்பங்களில் செய்த உதவிக்கு, இதைச் செய்தால், பெரிய உபகாரமாக இருக்கும்" என்று அவனைக் கேட்டுக்கொண்டேன். 'பார்க்கலாம்!' என்று கூறிச் சென்றான்.

**நாச்சி, ஏன் வள்ளியானாள்?**

**அவ்வளவு நல்லவளான அவள், வரதனுடன் வாழ்க்கை நடத்தவேண்டிய, அவசியம் என்ன?**

**கடிகாரம், தன்னுடைய தென்றாரே. மாஜிஸ்திரேட் மருதவாணர்—அது, ஏன்?**

என்கிற புதிர்கள்மட்டும் எனக்கு விளங்கவில்லை.

அவைகளைப்பற்றி யோசித்தபடியே வேலைகளைக் கவனிக்கலானேன். என்னை அறியாமலே என் கை, அங்கிருந்த சிங்கார மடத்து ஜகத்குருவின் படத்தை கடையிலிருந்து கழட்டச் சென்றது. கழற்றிவிட்டு, பெருமூச்சு விட்டபடி வேலைகளைக் கவனிக்கலானேன்.

மீண்டும் மீண்டும் அந்தச் சந்தேகங்கள், மனதில் கூத்தாடிக்கொண்டிருந்தன.

(வளரும்)

# அரசியற் கருத்துக்கள்

**[ அன்று முதல் இன்று வரை ]**

**[பேராசிரியர் இருதயராஜ்]**

ஹாப்ஸ் நினைத்தார் — சர்வாதிகாரியான மன்னன் இருந்தால்தான் அமைதியும் சமாதானமும் இருக்கும். மன்னனுடைய வலிமையைக் குறைத்துவிட்டால் அவன் இருந்தும் பயனில்லை அராஜகம் நிலவும். ஒன்று சர்வாதிகாரம் இல்லையேல் அராஜகம். இதுதான் இருக்கமுடியும் என்று நினைத்தார். அவர் தன் நாட்களில் நேரிற்கண்ட அனுபவங்களே இந்த முடிவுக்கு அவரை இழுத்துவந்தது. அவருடைய மன்னன் ஒரு பெரியபோலிஸ்காரனைப்போல் இருக்கவேண்டும் என்று அவர் எண்ணினார். எப்பொழுதும் மக்களை கவனமாக கவனித்துக்கொண்டே இருந்து நடத்தையில் தவறியதும் அவர்களைத் தண்டிப்பதற்குத் தயாராயிருக்கவேண்டும் மன்னன். ஆடு மாடுகளை மேய்த்துக்கொண்டிருக்கும் இடையனைப்போல் இருக்கவேண்டும் என்றார் ஹாப்ஸ். இந்த நிலை மாறி மக்களுக்குக் கொஞ்சம் இடம் கொடுத்தாலும், கண்காணிப்பைக் கொஞ்சம் குறைத்தாலும், கலகமும் கலவரமும் நாசமும் விளையும் என்று அவர் நம்பினார்.

தண்டனைக்குப் பயந்துதான் மக்கள் அடங்கி நல்லவர்களாக இருப்பார்கள் என்று ஹாப்ஸ் நினைத்தது தவறு. போற்றக்கூடியப் பல மனிதப் பண்புகள் உண்டு. அவைகள்தான் மக்களைப் பெருமைக்குரிய காரியங்களை செய்யத் தூண்டுகின்றன என்பதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை, கைதிகளைப்போல் மக்களைக் கண்காணித்தால்தான் அவர்கள் அடங்குவார்கள் என்று அவர் நம்பினார்.

மாக்கியவல்லியாவது, "மன்னன் செய்வீகச் சட்டங்களுக்கும் இயற்கைச் சட்டங்களுக்கு கட்டுப்பட்டவன்" என்றார். ஆனால் ஹாப்ஸ் 'எந்தச் சட்டமாயினும் மன்னன் அனுமதித்தால்தான் சட்டமாக்கலாம், அதனால் அவன் எந்தச் சட்டத்துச்கும் கட்டுப்பட்டவனல்ல" என்றார். போடின் கூட "மன்னன் தெய்வீகச் சட்டங்கள், இயற்கைச் சட்டங்கள், சர்வதேசச் சட்டங்கள், இவைகளுக்குக் கட்டுப்பட்டவன்" என்றார். ஆனால் ஹாப்ஸ்தான் முதன்முதலாக ஒரு அரசின் தலைவன் வரம்பில்லாத சர்வாதிகாரத்தைப் பெற்றிருக்கவேண்டும் என்ற கொள்கையை வெளியிட்டார்.

மன்னர்கள் தெய்வீக உரிமைக் கொள்கையை வற்புறுத்தித் தங்கள் பலத்தைப் பெருக்கிக்கொள்ள முயன்று தோல்வி கண்டு அயர்ந்து போயிருந்த நேரத்தில் ஹாப்ஸ் கூறிய விளக்கம் அவர்களுக்கு மிகவும் உதவியாயிருந்தது.

பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரிட்டனில் ஹாப்ஸ் தனது கருத்துக்களை வெளியிட்ட நேரத்தில் ஐரோப்பாவில் வேறு சில அறிஞர்கள் புதுக் கருத்துக்களை தோற்றுவித்தனர்.

**ஸ்பிநோசா**

ஸ்பிநோசா என்பவர் ஒரு போர்ச்சுகீசிய யூதர், மதக் கொடுமையும் அரசாங்கக் கொடுமையும் அவரை வாழவிடவில்லை தாய் நாட்டில். எனவே ஹாலந்திற்குச் சென்று அடைக்கலம் புகுந்தார். இந்த இவருடைய வாழ்க்கை அனுபவம் அவருடைய அரசியல் கருத்துக்களை உருவாக்கின.

இயற்கை நிலையில் மனிதர் வாழ்ந்தபோது அவரவர் வலிமைக்குத்தக்கவாறு நடப்பதே இயற்கை உரிமையாகக் கருதப்பட்டது. பிறகு அந்த நிலையில் வெறுப்படைந்து எல்லோரும் ஒன்றுகூடித் தங்கள் வலிமைகளை எல்

லாம் ஒன்றாகத் திரட்டி ஒரு கூட்டு அதிகாரம் நிறுவுகின்றனர், அதாவது ஒரு தலைவனைத் தேர்ந்தெடுத்து அவனுக்கு எல்லா அதிகாரமும் தருகின்றனர். அந்த அதிகாரமும் வலிமையின் சக்தியைப் பொறுத்தே இருக்கும். வலிமை இருக்கும்வரை அதிகாரம் நிலைக்கும். வலிமை குறைந்தால் அதிகாரமும் குறையும். வலிமை போய்விட்டால் அதிகாரமும் போய்விடும். குடிகளைப் பயமுறுத்தி அடக்கியாளும் வலிமை இல்லாதபொழுது அவர்களைக் கட்டாயப்படுத்தும் அதிகார உரிமைக்கும் — இடமில்லை.

எனவே ஹாப்ஸைப் போலவே இயற்கை நிலையில் ஆரம்பித்து, மனிதருடைய குணங்களும் மிருகக் குணமாயிருப்பதாக பாவித்து, ஆனால் ஒப்பந்தத்துக்குப் பிறகு ஹாப்ஸ் சொல்லுவதற்கு மாறாக, வெற்றிகரமாக மன்னனை எதிர்த்து விரட்ட முடிந்தால் அப்படிச் செய்து கொடுங்கோலனை நீக்கிவிட்டுத் திரும்பவும் இழந்த சுதந்தரத்தை அடையலாம் என்ற முடிவுக்கு வருகிறார் ஸ்பினோசா.

மேலும் மன்னராட்சியை விட, குடியரசாட்சியே சிறந்தது. ஏனெனில் மக்கள் தங்கள் அதிகாரத்தை ஏதோ ஒருவனிடம் கொடுத்து வைப்பதைவிட, தங்களுடைய பிரதிநிதிகளுடைய கையிலேயே விட்டுவைப்பது நல்லது. அவ்வித அரசாங்கத்துக்கு அவ்வளவு எதிர்ப்பும் இருக்காது என்று ஸ்பினோசா கருதினார்.

மக்கியவல்லியைப் போல் பொது ஸ்தாபனங்களுக்கு ஒரு நெறியும் தனிப்பட்டவர்களுக்கு வேறு நெறியும் உண்டு என்றார் ஸ்பினோசா. மேலும் கடமைகள், உரிமைகள் என்று சொல்லுவதில் அர்த்தமில்லை. அரசும், குடிமக்களும் ஏதாவது செய்தால் அவரவர்களுக்கு நன்மை ஏற்படலாமோ தீமையை அகற்றலாமோ அதையேச் செய்ய வேண்டும் என்றார்.

பூபண்டார்ப்

அவருக்குப்பின் தோன்றிய பூபண்டார்ப் ஒரு ஜெர்மானிய அறிஞர். அவர் இயற்கை நிலையைப் பற்றி ஹாப்ஸ் சொன்னதை அப்படியே ஏற்றுக்கொண்டார் சரித்திர உண்மையாக. ஆனால் மனிதரின் சேர்ந்து வாழும் பண்பும் ஒரு காரணமாக இருந்திருக்க வேண்டும் இயற்கை நிலையைக் கைவிட்டதற்கு என்று நினைத்தார். சமுதாயத்தில் வாழ்வதற்கு சொந்த சொத்துரிமையும், அடிமைகளும் அவசியம் தேவை என்றும் கருதினார்.

இரண்டுவித ஒப்பந்தங்கள் இருப்பதாக பூபண்டார்ப் நினைத்தார். தங்களுக்குள் இயற்கை நிலையைக் கைவிட்ட பிறகு ஒரு அரசியல் அமைப்பு இருக்கவேண்டுமென்றும், பெரும்பான்மையோரின் கருத்துப்படி அது எப்படிப்பட்ட அரசியல் அமைப்பாக இருப்பதென்றும் முடிவு செய்து ஒப்பந்தம்செய்து கொள்ளுகின்றனர். இது தான் சமுதாய ஒப்பந்தம். சமுதாயம் ஏற்பட்டபின் யாரிடம் அதிகாரம் இருக்கவேண்டுமென அவர்கள் நினைக்கின்றார்களோ — அவர் ஒருவராயிருந்தாலும், பலராயிருந்தாலும்—அவரிடம் தங்கள் உரிமைகளை ஒப்படைத்துவிட்டு அவருக்கு கீழ்ப்படிவதாக வாக்களித்து அதற்குப்பதில் அவர், தான் அவர்களைக் காப்பாற்றிப் பொதுநல அபிவிருத்திக்காக அதிகாரத்தைப் பிரயோகிப்பதாக வாக்களித்து இரண்டாவது ஒப்பந்தம் அதாவது அரசியல் ஒப்பந்தம் ஏற்படுகிறது. ஆனால் இந்த அதிகாரி இயற்கைச் சட்டங்கள், தெய்வீகச் சட்டங்கள், எல்லோருக்கும் பொதுவான பழக்கவழக்கங்கள் இவைகளுக்குக் கட்டுப்பட்டவன் என்று பூபண்டார்ப் கருதினார்.

## லாக் 1632-1704

பிரிட்டனின் 17-வது நூற்றாண்டின் இறுதியில் கடைசி ஸ்டூவர்ட் மன்னன் இரண்டாவது ஜேம்ஸ் என்பவர், சர்வாதிகாரம் செய்யத் துணிந்த சார்லஸ் மன்னனுக்கேற்பட்ட கதியை மறந்துவிட்டு யதேச்சாதிகாரமாக நடக்கத்தலைப்பட்டான். மக்கள் சபையாகிய பார்லிமெண்ட் இயற்றிய சட்டங்களைத் தள்ளிவைக்கத் தனக்கு உரிமையிருப்பதாக ஜேம்ஸ் கூறியது பார்லிமெண்டின் சட்ட நிருமாண அதிகாரத்தை அழிப்பதாகக் கருதப்பட்டது. அதுவரையில் பிரிட்டிஷ் மன்னர் எவரும் செய்யத் துணியாதது. அதன் விளைவாக மக்கள் ஒன்று திரண்டனர். இந்த எதிர்ப்பைக்கண்டதும், தன்னால் சமாளிக்க இயலாது என்று கண்ட ஜேம்ஸ் ஒருவருக்கும் சொல்லாமலே அரண்மனையைவிட்டு ஓடி பிரான்சுக்குச் சென்று தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. அதற்குப்பின் மக்கள் ஒன்று சேர்ந்து தங்களுக்குப் பிடித்தமான வில்லியம் என்பவரை அவர் பிற நாட்டவராயிருந்தபோதிலும் அரசராக்கினார்கள். புதிய அரசரை நியமிக்கும் பொழுது அவரிடம் இருந்து சில வாக்குறுதிகளைப் பெற்றுக்கொண்டும், அவர் மக்களிடம் நடந்துகொள்ளும் விதம் பற்றி சில நிபந்தனைகளை விதித்தும் பிரிட்டனில் சட்ட வரம்புக்குட்பட்ட மன்னராட்சியை ஏற்படுத்தினார்கள்.

இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் பார்த்த லாக் என்ற அறிஞர் காலத்திற்கேற்ப சமுதாய ஒப்பந்தக் கொள்கையையே ஆதரித்தார்.

இயற்கை நிலையைப் பற்றி லாக் கூறிய கருத்து ஹாப்ஸ் சொன்னதற்கு மாறானது. இயற்கை நிலையில் மனிதன் சுயநலவாதியாக இருந்தபோதிலும் சமுதாயஉணர்ச்சியும் கூட்டு வாழ்க்கைப் பண்பும் கொண்டிருந்தான். அந்நிலையில் அவன் பிறரை ஏய்த்துப் பிழைக்கவோ, மற்றவருடன் சச்சரவை வளர்த்துக்கொள்ளுவதற்கோ இடமில்லை. காரணம், அதற்கு அவசியம் எழவில்லை என்பதால். இயற்கை நிலையில் மக்கள் தொகை குறைவு, ஆனால் வளமிகுந்த இயற்கை ஏராளமான பொருள்களை வாரி வழங்கியது. குறைவான எண்ணிக்கையுள்ள மக்களும், நிறைய செல்வமும் இருந்த காரணத்தால் சொத்து சம்பந்தமான சச்சரவுகளுக்கு இடமில்லை. அவனவன் தன் உழைப்பினால் தேடிய சொத்துகளை அவனே அனுபவித்து வந்தான். சமாதானப் பிரிய

---

## மு. கருணாநிதி

கடந்த இரண்டுமாத காலமாக கண்ணோய்க்கு ஆளாகி, மிகவும் வேதனைப்பட்டு, ஐந்துமுறைகள் ஆபரேஷன் நடந்து, படுக்கையிலிருந்துவரும் நமது தோழர் கருணாநிதிக்கு கடந்த வாரம் சென்னை கண் ஆஸ்பத்திரியில் கண்ணில் 'மேஜர் ஆபரேஷன்' செய்யப்பட்டது. வலி, வரவர குறைந்து வருகிறது—விரைவில் பூரண குணம் ஏற்பட்டுவிடுமென டாக்டர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஏராளமான நண்பர்களும், தோழர்களும் வந்து பார்த்துச்சென்ற வண்ணம் இருக்கிறார்கள்.

னாக பரோபகார சிந்தையுள்ளவனாக வாழ்ந்தான்.

இருந்தாலும் அந்நிலையில் சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்தன. இயற்கைப்படி எது நியாயம் என்று நிர்ணயிக்க முடியவில்லை. தப்பித்தவறி உடைமையைப் பற்றி ஏதாவது தகராறுகள் எழுந்தால் நடுவராயிருந்து அவைகளைத் தீர்த்துவைக்க யாருமில்லை. தீர்ப்புக் கொடுத்தாலும் அதை அமுல் செய்வதற்கான அமைப்பும் அதிகாரமும் ஒருவருக்குமில்லை. இந்தக் குறைகளை நிவர்த்திக்கவே மக்கள் சமூக ஒப்பந்தம் செய்துகொள்ள முற்படுகிறார்கள்.

இந்த ஒப்பந்தத்தின்படி மக்கள் தங்கள் எல்லா உரிமைகளையும் விட்டுவிடுவதில்லை. இயற்கைப்படி எது நியாயம் என்று நிர்ணயித்து அதை நிறைவேற்றிவைக்கும் அந்த ஒரு உரிமையைத்தான் ஒப்படைக்கிறார்கள். அதுவும் தாங்கள் எல்லோரும் சேர்ந்த சமுதாயத்தினிடம், அதுவும் தங்களுடைய உயிர், சொத்து, சுதந்தரம் ஆகியவற்றைப்பற்றிய மற்ற உரிமைகளை சமுதாயம் காப்பாற்றவேண்டும் என்ற நிபந்தனையுடன்.

ஆகவே மக்கள் எல்லோரும் சேர்ந்து தாங்கள் நியமிக்கும் நீதிபதிகளிடம் விசாரணை செய்து தண்டிக்கும் அதிகாரத்தை ஒப்புவிப்பதற்கும், தாங்களோ அல்லது தங்கள் பிரதிநிதிகளோ இயற்றும் சட்டங்களை மதித்து அவைகளின்படி நடப்பதற்கும் சம்மதித்து உடன்படிக்கைச் செய்துகொள்ளுகின்றனர். அதற்குப்பின் தான் இயற்கை நிலை மாறி சமுதாயம் என்று ஏற்படுகிறது. அரசியல் ஆரம்பமாகிறது. நிர்வாகத் துறையும், சட்டங்கள் செய்யும் அதிகாரமும் தோன்றுகின்றன.

இயற்கை நிலையில் மனிதர் வாழ்ந்தபோது அவர்களின் ஒருவரிடமும் எதேச்சையான சர்வாதிகாரம் இருந்தது கிடையாது. அதனால் அவர்களெல்லோரும் சேர்ந்து ஒரு தலைவனைத் தேர்ந்தெடுத்து நியமிக்கும்போது அவனுக்கு யதேச்சையான சர்வாதிகாரத்தை அளிக்கமுடியாது — தங்களிடமில்லாத ஒன்றை வேறொருவருக்கு கொடுப்பது இயலாது என்ற காரணத்தால்.

எனவே உடன்படிக்கையின் விளைவாக ஏற்படும் அதிபதிக்கோ, அரசாங்கத்துக்கோ, மக்களை அல்லல் படுத்தி வேதனை உண்டாக்கவோ, அடிமைப்படுத்தவோ, அழிக்கவோ அதிகாரமில்லை. இயற்கைப்படி எது நியாயம் என்று சொல்லக்கூடிய இயற்கைச் சட்டங்களை வரையறுப்பதற்கும், நீதிபதிகளை நியமித்து அவைகளை பரிபாலனம் செய்வதற்கும், அரசு ஏற்படுத்தப்படுகிறது.

### அரசும் மக்களும்

இக்கருத்துப்படி இயற்கை நிலையிலிருந்து, பிறகு ஒரு அரசியல் சமுதாயம் தோன்றுகிறது. எதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டதோ அந்தவேலையைச் செய்வதற்காக அதன்பின் அரசாங்கம் என்ற அமைப்பு ஏற்படுத்தப்படுகிறது. அந்தவேலையை அது சரிவரச் செய்யவில்லையென்றால், அல்லது அது மக்கள் விருப்பத்துக்குமாறாக நடக்கிறதென்றால் அதை மாற்றியமைத்து விடலாம். அரசாங்கத்தை மாற்றுவதால் அரசு அழிந்து விடாது. அரசாங்கம் மறைந்த உடனே மக்கள் இயற்கை நிலைக்குப் போய்விடுவதில்லை. அரசாங்கம் போய்விட்டாலும் அரசு அல்லது சமுதாயம் நிலையாக இருக்கும் என்று எடுத்துக் காட்டினார் லாக்.

அதனால் மன்னன் கொடுங்கோலனால் அவனைவிரட்டிவிட்டு வேறொருவனை மன்னனாக்கலாம். மன்னனை விரட்டிவிட்டால் உடனே இயற்கை நிலை ஏற்பட்டுவிடாது என்றார் லாக். மக்களிடந்தான் முடிவான அதிகாரம் எப்பொழுதுமிருக்கிறது. தாங்களாகப் பார்த்து யாரிடம் சட்டமியற்றும் அதிகாரம், நிர்வாகப் பொறுப்பு, நீதி பரிபாலனம் முதலிய உரிமைகளைக் கொடுத்திருக்கிறார்களோ அவர்களைப் புரட்சியின் மூலம் மாற்றிவிடலாம் என்று கூறும்போது லாக் புரட்சியை ஆதரிக்கிறார். இரண்டாவது ஜேம்ஸ் மன்னனை எதிர்த்து பிறகு வில்லியம் என்ற அரசனை ஆட்சிபீடத்தில் அமரச் செய்த புரட்சியை ஆதரிக்கும் வகையில் லாக் எழுதினார். சார்லஸ் அரசனை சிரச்சேதம் செய்ததைக் கண்டித்து ஹாப்ஸ் என்பவர், எவ்வளவு கொடுங்கோலனாலும் மன்னனுக்கு கீழ்ப்படிந்தேதான் ஆகவேண்டும்; அப்படியில்லாமல் மன்னனை எதிர்த்தால் இயற்கைநிலை ஏற்பட்டுவிடும் என்று கருதினார்.

சொத்து, உயிர், சுதந்தரம் என்றவைகளையொட்டிய உரிமைகள் ஒவ்வொருவருடைய பிறப்புரிமை. அதை யாருக்கும், எந்த ஒப்பந்தத்தாலும், தானமாக வழங்கவோ, விருப்பப்பட்டு விட்டுவிடுவதற்கோ முடியாது. யாராலும் அவைகளை பலவந்தப்படுத்திப் பறித்துவிடவும் முடியாது என்று லாக் கூறியது அரசியற்கருத்துக்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது.

(தொடரும்)

---

## சி. என். ஏ.

—::—

கடந்த நாலைந்து நாட்களாக, இருமல், காய்ச்சல் காரணமாக உடல் நலிவுற்று டாக்டரிடம் சிகிச்சைபெற்றுக் கொண்டிருக்கிறார். நெஞ்சில் நிறைய சளி இருந்துகொண்டு, தொல்லை கொடுக்கிறது. எனவே, இன்னும் இரண்டு வாரங்கட்கு, வெளியூர் நிகழ்ச்சிகள் எதிலும் கலந்துகொள்ள இயலாத நிலையிலிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

---

## சந்தாதாரர்களுக்கு

———

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

**மானேஜர்.**

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St, Kancheepuram.